Registered at the G. P. O. as a Newspaper

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

National TAMIL DAILY

தேசிய தினசரி

போன 389

தபாற் பெட்டி எண்: 49

மலர் 3 | யாழ்ப்பாணம், பிலவ ஆவணி 27 ஆம் நாள் | ரபி ஆகிர் 1 | (12-9 61) | செவ்வாய்க்கிழமை | இதழ் 1-0

வாசனை உலகில் ஓர் பரபரப்பு!

இன்பம் தரும் 33 303 3003 பத்திகளை

உபயோகியுங்கள்.

தயாரிப்பாளர்கள்:

S. V. முருகேசன் அன் சன்ஸ்

சென்னை பெங்களூர்–2 மதுரை

# தொழில் அமைச்சர் திடீர் விஜயம்

## காங்கேசன்துறை திட்டத்தை பார்வையிட்டார்

யாழ்ப்பாணம், செவ்வாய்

தற்காலிக தேசியமய சேவை மந்திரி திரு எம். பி. டி' சற் ஸ்ரீவர்த்தன நேற்று காலை விமானமூலம் இங்கு வந்து சேர்ந்தார்.

இவரை யாழ்ப்பாண எம். பி திரு. ஏ. டி. துரையப்பாவும் யாழ்ப்பாண மேயர் திரு. டி.எஸ் துரைராஜாவும் பலாலி விமான நிலையத்தில் மலர் மாலை சூட்டி வரவேற்றனர்.

தற்காலிக மந்திரியுடன் இலங்கை சிமிந்து தொழிற்சாலை கார்ப்பரேஷன் தலைவர் திரு. ஜி. வி. பி. சமரசிங்கா, இ. போ. ச. தலைவர் திரு. ஆர். டி. டி' சில்வா, போக்குவரத்துச் சபை உப தலைவர் திரு. நமசிவாயம் ஆகியோரும் விஜயம்செய்துள்ளனர். இவர்கள் இங்கு இரு நாட்கள்வரை தங்கியிருப்பார்கள்.

விமானநிலையத்தில் சிறுபான்மைத் தமிழர் மகாசபைத் தலைவர் திரு. எம். ஸி. சுப்பிரமணியம், திரு.கே.வி. சுப்பிரமணியம் ஆகியோரும் மாலை சூட்டி வரவேற்றனர்.

ஒன்றரைக்கோடி ரூபாய் செலவில் நிர்மாணிக்கப்படவிருக்கும் காங்கேசன்துறை துறைமுக திட்டத்தை மந்திரி சென்று பார்வையிட்டார். இதற்குபின்னர், மந்திரி காங்கேசன்துறை சிமிந்தித் தொழிற்சாலை, யாழ்ப்பாணம் பஸ் நிலையம், புதிய மார்க்கெட் ஆகியவற்றையும் பார்வையிட்டார். மந்திரி பஸ் நிலயம், புதிய சந்தை ஆகியவற்றைப் பார்வையிடுகையில், யாழ்ப்பாணம் எம். பி. திரு. ஏ. டி. துரையப்பாவும் பிரசன்னமாயிருந்தார்.

நண்பகலில் மந்திரிக்கு, யாழ்ப்பாண மாநகரசபை ஒரு விருந்தொன்றை அளித்தது. வாடிவீட்டில் நடைபெற்ற இவ்விருந்தின்போது, மேயர் திரு-

(5ம் பக்கம் பார்க்க)

## பிரதமர் ஸ்ரீமதி பண்டாரநாயக்கா கொழும்பு திரும்பினர்

### கவர்னர்ஜெனரல், மந்திரிகள் வரவேற்றனர்

கொழும்பு, திங்கள்

பிரதம மந்திரி ஸ்ரீமதி பண்டாரநாயகா பெல்கிரேட் நடுநிலைமை அதிபர்கள் மகாநாட்டில் கலந்துகொண்ட பின் இன்று பிற்பகல் கொழும்பு திரும்பினர். கவர்னர் ஜெனரல், தற்காலிக மந்திரிசபைத் தலைவர் திரு. ஸி. பி. டி' சில்வா, உள்நாட்டுமந்திரி திரு. மைத்திரிபாலசேனநாயகா, இதர மந்திரிகள், சபாநாயகர், ராஜதந்திரிகள் ஆகியோர் அவரை இரத்மலானை விமானநிலையத்தில் வரவேற்றனர். விமான நிலையத்தில் அவர் வெளிநாட்டு ராஜதந்திரிகளுடனும், பொது மக்களுடனும் சிறிதுநேரம் சம்பாஷித்தபின். "டெம்பிள் டிரீஸ்" மாளிகைக்குக் காரில் புறப்பட்டார். (பிரதமர் கடந்த ஆகஸ்ட் மாதம் 29-ந் திகதி இலங்கையைவிட்டுப் புறப்பட்டார்.)

பெல்கிரேடிலிருந்து திரும்பும் வழியில் சென்னை விமான நிலையத்தில் அவர் ஒரு மணி நேரம் தாமதித்தார். அப்போது தமிழ்நாட்டு அரசாங்கத்தின் பிரதமக் காரியதரிசி திரு: ஆர். ஏ. கோபாலசாமியும், சென்னையிலுள்ள இலங்கை உதவி ஹைகமிஷனர் திரு. ஜயவீராவும் பிரதமரை வரவேற்றனர்.

## ஆக்ராவில் சாம்ராஜ்ய நிதிமந்திரிகள் மகாநாடு

ஆக்ரா, செப். 11

கானா தலைநகர் ஆக்ராவில் சாம்ராஜ்ய நிதிமந்திரிகள் மகாநாடு நடைபெறவிருக்கிறது. 13 சாம்ராஜ்ய நாடுகள் இம்மகாநாட்டில் கலந்துகொள்ளவிருக்கின்றன. முதன் முதல் ஆபிரிக்காவில் நடைபெறும் இந்த சாம்ராஜ்ய நிதிமந்திரிகள் மகாநாடு, ஐரோப்பிய பொதுச்சந்தையில் பிரிட்டன் சேர்வது பற்றி ஆராயவிருக்கிறது. இலங்கை நிதிமந்திரி திரு. பிலிக்ஸ் டயஸ் பண்டாரநாயகாவும், இந்திய நிதிமந்திரி திரு. மொரார்ஜிதேசாயும் இம்மகாநாட்டில் கலந்து கொள்வர்.

—

## பெதிக் லாரன்ஸ் பிரபு காலமானர்

லண்டன், செப். 11

பிரிட்டனின் பிரபல சோஷலிஸ்ட் தலைவர்களில் ஒருவரான பெதிக்லாரன்ஸ் பிரபு தன் 89 வது வயதில் இன்று காலமானர். அட்லியின் தொழிற் கட்சி மந்திரி சபையில் அவர் இந்தியா மந்திரியாகக் கடமையாற்றியதுடன் இந்தியா, பாகிஸ்தான் சுதந்திரப் பேச்சுவார்த்தைகளில் முக்கிய பங்கெடுத்துக்கொண்டார். லார்ட் பெதிக்லாரன்ஸ், 1923-ம் ஆண்டு சர்வின்ஸ்டன் சர்ச்சிலைத் தோற்கடித்து முதலாவதாக பார்லிமென்டில் பிரவேசித்தார்.

## மேலும் 2 குண்டுகளை ரஷ்யா வெடித்தது!

### ஜப்பானில் முதல் அதிர்ச்சி

வாஷிங்டன், செப். 11

ரஷ்யா மேலும் 2 அணு ஆயுதங்களைப் பரீட்சித்ததாக வாஷிங்டனில் அறிவிக்கப்பட்டது. இவற்றிலொன்று மிகவும் பெரியது என்றும், சோவியத் வடக்குப் பகுதியில் இப்பரீட்சைகள் நடைபெற்றன என்றும் அறிவிக்கப்பட்டது. முதல் குண்டைப் பரீட்சித்து, 7 மணிநேரத்திற்குள் 2 வது குண்டை ரஷ்யாவெடித்ததாம். வானவெளியில் 6 பரீட்சைகளை ரஷ்யா நடத்தியிருக்கிறது.

நேற்று ஜப்பானில் காற்று அழுத்தத்தில் மாறுதல் ஏற்பட்டதென்றும், இந்த நிலை 50 நிமிடம் நீடித்ததாயும், ரஷ்யா அணு சோதனையின் அதிர்ச்சி இப்போதுதான் முதலாவதாக ஜப்பானைப் பாதித்ததாயும் அறிவிக்கப்படுகிறது.

## "சோவியத்-மேற்கத்திய சந்திப்பு நிச்சயம்"

### புதுடில்லிதிரும்பிய நேருநம்பிக்கை

### ஐ.நா.வுக்குச் செல்வாராம்

புதுடில்லி, செப், 11

"சோவியத் தலைவர்களும் மேற்கத்திய தலைவர்களும் சந்தித்துப் பேசுவதற்கான ஏற்பாடுகள் இன்னும் செய்யப்படாவிட்டாலும் சந்திப்பு நிச்சயமாக நடைபெறுமென்பது எனது நம்பிக்கை."

இவ்வாறு பாரதப் பிரதமர் ஸ்ரீ நேரு இன்று புதுடில்லி பாலம் விமானநிலையத்தில் வந்திறங்கிய பின் நிருபர்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் கூறினர்.

பெல்கிரேட்டில் நடைபெற்ற நடுநிலைமை நாடுகளின் தலைவர்களின் மகாநாட்டில் கலந்துகொண்டபின் ரஷ்யாவுக்குச் சென்று சோவியத் பிரதமர் குருஷ்சேவுடன் பேச்சுவார்த்தை நடத்திவிட்டு ஸ்ரீ நேரு இன்று தாயகம் திரும்பினர்.

பிரதமரை உபராஷ்டிரபதி டாக்டர் ராதாகிருஷ்ணன், மத்திய அரசாங்க மந்திரிகள், வெளிநாட்டு ஸ்தானிகர்கள், எம். பி. க்கள் மற்றும் பெருந்திரளான பொதுமக்கள் முதலானேர் விமான நிலையத்தில் வரவேற்றனர்.

"உலக நெருக்கடி சற்றுத் தணிந்திருப்பதாகத் தோன்றிய போதிலும் நெருக்கடி நீங்கிவிட்டதென்று கூறமுடியாது நெருக்கடியை அதிகரிக்கக் கூடிய எதுவும் நிகழமாட்டாது என்றும் சொல்வதற்கில்லை" என்று ஸ்ரீ நேரு சொன்னர்.

பெல்கிரேட் மகாநாடும் தனது மாஸ்கோ விஜயமும் நல்ல விளைவுகளை ஏற்படுத்தியிருப்பதாகவே தாம் நம்புவதாகவும் அவர் தெரிவித்தார்.

பெர்லின், ஜெர்மன் பிரச்சினை சம்பந்தமாக ஒரு சமாதானத் தீர்வு காண்பதற்காக சோவியத் தலைவர்களும் மேற்கத்திய தலைவர்களும் விரைவில் சந்தித்துப் பேசுவார்களென்பது எனது நிச்சயமான நம்பிக்கை என்று ஸ்ரீ நேரு கூறினர்.

சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்துவதை குருஷ்சேவோ, கென்னடியோ, மாக்மில்லனே எதிர்க்கவில்லை. கருத்து வேற்றுமை இருந்தாலும் பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாண முடியாதவிஷயமல்ல" என்று அவர் சொன்னர்.

### ரஷ்யாவில் பதட்டம் இல்லை

மாஸ்கோ "மனேநிலை எப்படியிருக்கிறது" என்று ஒரு நிருபர் கேட்டதற்கு ஸ்ரீ நேரு பதிலளிக்கையில்," மனேநிலையென்பது மாறக்கூடியதாகையால்

(5-ம் பக்கம் பார்க்க)

## விலைகளை சோதிக்க பொலிஸ் இன்ஸ்பெக்டர்களுக்கு அதிகாரம்

### வர்த்தகர் மீது புகார் கூறினல் நடவடிக்கை எடுப்பர்

கொழும்பு, திங்கள்

சகல பொலிஸ் இன்ஸ்பெக்டர்களுக்கும், உதவி இன்ஸ்பெக்டர்களுக்கும் விலைக்கட்டுப்பாட்டு இன்ஸ்பெக்டர்களுக்கான அதிகாரங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன என்று வர்த்தக மந்திரி அறிவித்தார்.

கட்டுப்பாட்டு விலைக்கு மேல் ஒரு வர்த்தகர் சாமான்களை விற்பதாக பொதுமக்களில் எவரும் புகார் கூறினல் அந்தவர்த்தகர் மீது பொலிசார் நடவடிக்கை எடுத்துக்கொள்ள முடியும். அரசாங்க அதிபர்கள் அவரவர் மாவட்டங்களில் விலைக்கட்டுப்பாட்டு அதிகாரிகளாய் இருப்பார்கள்" எனவும் மந்திரி அறிவித்தார்.

## பல தலைமுறைகளாக இங்கு வசிக்கும் இந்தியர் பிரச்சினை

### பேச்சுவார்த்தை நடத்த இலங்கை விருப்பம்

மதுரை, செப். 11

பல தலைமுறைகளாக இலங்கையில் வசிக்கும் இந்தியர்களை பற்றிப் பேச்சுவார்த்தை நடத்த இலங்கை விருப்பம் தெரிவித்திருக்கிறது என்று கொழும்பிலுள்ள இந்திய ஹைகமிஷனர் திரு கபூர் இங்கு கூறினர். சட்டவிரோதமாக இலங்கையில் பிரவேசிக்கும் முயற்சிகள் பற்றி ஆராயும் பொருட்டு திரு. கபூர் யாழ்பாணத்தின் தெற்கு எல்லையிலும், கேரளத்திலும் சுற்றுப்பிரயாணம் செய்யவிருக்கிறார். இன்று திரு. கபூர் மதுரை வந்து சேர்ந்தார்.

—

### கைதிகளுக்கு மன்னிப்பு

கொழும்பு, திங்கள்

செப்டம்பர் 26-ந் திகதி பண்டாரநாயகா ஞாபகார்த்த தினத்தன்று தீரா கோயிலுக்கு கட்டப்படும் கைதிகளுக்கு மன்னிப்பளிக்கப்படும் எனத் தெரிகிறது. மன்னிப்பளிக்கப்பட்டு மறைவில் நூற்றுக்கு மேலான கைதிகள் விடுவிக்கப்படுவர்.




# வளவுக்குள் சட்டவிரோதமாய் பிரவேசித்ததாக வழக்கு
## குற்றம் நிரூபிக்கப்படாததால் எதிரி விடுதலை

மாவிட்டபுரம், திங்கள்

"இவ்வழக்கில் வழக்காளியாயுள்ளவர் ஒரு தனிப்பட்ட பெண். அவருடன் நீர் ஒரு தொந்தரவுக்கும் போகக்கூடாது. சட்டத்தை நீர் உமது கையில் எடுக்கப்பார்க்கிறீர். வளக்காளியின் காணிக்குள் நீர் செல்லுவதற்கு உமக்கு அதிகாரம் இருக்குமாயின் நீர் அதற்கென ஒரு வழக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்து அவ்வழக்கின் தீர்ப்பைக் கொண்டே உமது அதிகாரத்தை நீர் அக்காணியில் செலுத்தலாம். அதுவரைக்கும் வழக்காளியையும் அவரது மகனையும் ஒரு தொந்தரவும் செய்யவேண்டாம் என எச்சரிக்கை செய்கிறேன்.

இவ்வழக்கில் உம்மை நான் விடுதலை செய்வதால் நீர் அதை ஒரு வெற்றியென்றுகருதவேண்டாம். நீர் இன்று விடுதலை செய்யப்படுவது உமது பாக்கியம் என்றே கருதவேண்டும். ஏனெனில் உமக்கு எதிரான இவ்வழக்கு சரியானமுறையில் நிரூபிக்கப் படாமையினாலேயே நீர் விடுதலை செய்யப்படுகிறீர். நீர் வீட்டுக்குச்சென்று உமது வேலையை கவனியும்." இவ்வாறு மல்லாகம் நீதிமன்றத்தில் திருமதி. பத்மலோசனி முத்தையா என்பவர் தெல்லிப்பழையைச்சேர்ந்த சின்னத்தம்பி பொன்னுத்துரை என்பவருக்கெதிராகத் தாக்கல் செய்த வழக்கொன்றில் நீதிபதி எதிரியை எச்சரிக்கை செய்து விடுதலை செய்கையில் கூறினர்.

இவ்வழக்கில் தெல்லிப்பழையைச் சேர்ந்த சின்னத்தமபி பொன்னுத் துரையென்பவர் அதேயூரைச்சேர்ந்த பத்மலோசனி முத்தையா என்பவரின் வளவுக்குள் சட்டவிரோதமாகப் பிரவேசித்து ரூபா 100 பெறுமதியான நட்டம் விளைவித்ததாகக் காங்கேசன்துறைப் பொலிசாரால் குற்றம் சாட்டப்பட்டது.

திருமதி பத்மலோசனி முத்தையா சாட்சியமளிக்கையில் இவ்வருடம் பங்குனிமாதம் 5-ம் திகதி எதிரி ஒரு நாயுடனும் தனது மகனுடனும் தன் காணிக்குள் வந்ததாயும் அவர் நாயைக்குளிக்க வார்த்துவிட்டு தன்னையும் கெட்ட வார்த்தைகளினுல் ஏசிவிட்டு தன் வீடு சென்றுவிட்டார் என்றும் பின்னர் ஒரு மண்வெட்டியுடன் தனது வளவுக்குள் வந்து தனது கிணற்றடியில் இருந்து அவரது வீடுவரை ஒரு வாய்க்கால் வெட்டினர் என்றும் எதிரி மறுபடியும் தன்னைக் கெட்ட வார்த்தைகளினுல் ஏசியதாயும் அக்கெட்ட வார்த்தைகளை நீதிமன்றத்தில் சொல்ல முடியாத நிலையிலிருப்பதாயும் கூறினர்.

வழக்காளியின் சாட்சியத்தைப் பதிவுசெய்தபின் நீதிபதி எதிரியை விடுதலை செய்தார்.

எதிரி தரப்பில் திரு. ஏ நித்தியானந்தன் ஆஜரானர். காங்கேசன்துறைப் பொலிஸ் நிலைய இன்ஸ்பெக்டர் திரு கே. துரைசிங்கம் வழக்கைத் தாக்கல் செய்தார்.

## எம். பி கள் தந்திக்கு பணம் செலுத்தவேண்டுமா?

கொழும்பு, திங்கள்

பார்லிமெண்ட் அங்கத்தவர்களால் 1957-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்திலிருந்து 1960-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்துக்கிடையில் அனுப்பப்பட்ட சுமார் 4,406 தந்திகள் அவர்களுக்கு அளிக்கப்பட்ட சலுகைகளுக்கு மீறியதாய் இருப்பதாக போஸ்ட்மாஸ்டர் ஜெனரல் குறிப்பிட்டுள்ளார்.

பிரதிநிதிகள்சபைக் குமாஸ்தா, போஸ்ட்மாஸ்டர் ஜெனரல், போக்குவரத்து மராமத்து அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி ஆகியோரைக் கொண்ட ஒரு விசேஷ கமிட்டி, இத் தந்திகளில் எவை இலவசமாக அனுப்பப்படலாம், எவற்றுக்கு அவர்கள் பணம் செலுத்த வேண்டும் என்பதுபற்றி போக்குவரத்து மராமத்து மந்திரிக்கு தெரிவிக்கவேண்டுமென அரசாங்க கணக்கு கமிட்டி கருத்து தெரிவித்துள்ளது.

சலுகையைப் பயன்படுத்தி எவ்வித தந்திகள் அனுப்பக் கூடாது என்பதுபற்றிய விபரமடங்கிய பட்டியல் ஒன்றைத் தயாரித்து சபாநாயகரிடம் சமர்ப்பிக்குமாறு கமிட்டியிடம் கோரப்பட்டுள்ளது.

## உங்கள் நோய்

குணப்படுத்த உத்தரவாதம். நீரிழிவுக்கு 15 நாள் மருந்து ரூ. 15-50. தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 12-50. பல வியாதிகளுக்கும் நற்சாட்சிப் பத்திரங்ளடங்கிய கற்றலோக் (Catalogue) இனம்.

வைத்தியர் பரிபூரணுநந்தர், கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

## தேவை

"சேல்ஸ்மென்" (விற்பனையாளர்கள்) தேவை. பிற்பகல் 2 மணிக்கும் 3 மணிக்குமிடையில் நேரில் வந்து விண்ணப்பிக்கவும். டயரும்ஸ், யாழ்ப்பாணம். 36

நல்லஅனுபவமுள்ள 'சிலிண்டர்' மெஷின் வேலை தெரிந்த ஒருவர் தேவை-ஈழநாடு லிமிட்டெட், த. பெ. எண் 49, யாழ்ப்பாணம்.

நல்ல அனுபவமுள்ள கலர் அச்சுவேலைகள் செய்யக் கூடிய "பிளேட்டின்" மெஷின் வேலை தெரிந்தவர் ஒருவர் தேவை: ஈழநாடு லிமிட்டெட், த. பெ. எண் 49, யாழ்ப்பாணம்.

தையல், எம்பிறிங் வேலைகளில் திறமையுள்ள மாணவிகள்தேவை. பொம்மைதொழில் பயிற்சி அளிக்கப்படும். பின்பு தொழில்வசதி வழங்கப்படும். 18-9-61 க்கு முன்மனுச் செய்க. 126, மேல் மாடி, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம்.

கலகா பகுதியில் ஈழநாடு தினப்பத்திரிகை விற்பனை செய்வதற்கு ஆர்வமுள்ள ஏஜண்டுகள் உடனே தேவை. மனுச் செய்க:

ஜெகஜோதி அன் கோ, குருதெனிய.

## 'இலக்கிய ஆர்வத்தை வளர்க்கவேண்டும்'

காத்தான்குடி, திங்கள்

"2000 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த பழந் தமிழரின் உயர்ந்த வாழ்வை இன்று நாம் அறியக்கூடியதாக இருக்கிறது. நம்மிடையே பழந் தமிழ் இலக்கியங்களை ஆர்வத்துடன் படிக்கும் ஒரு புதிய ஆர்வம் ஏற்பட்டுள்ளது. இது பாராட்டக் கூடியதே. அத்துடன் இளம் எழுத்தாளர்களையும் உற்சாகமூட்டவேண்டும். நாடு முழுவதும் பல கழகங்களை நிறுவித் தமிழ்ப்பணி புரியவேண்டும். கலைச் சொற்களை ஆராய்ந்து விஞ்ஞான சாத்திரத்தின் பல துறைகளையும் விளக்கி நூல்கள் வெளியிடவேண்டும்."

இவ்வாறு முத்தமிழ் தொண்டர் கழகம் நடாத்திய கருத்தரங்கில் பேசிய திரு. எம. பொன்னையா குறிப்பிட்டார்.

திரு. கே. செபமாலை பேசும்போது நூல்நிலையம் அமைப்பதுபற்றிய சில யோசனைகளைக் கூறினர் மற்றும் பலர் பேசிய பின் செயலாளர் கே. இரத்தினசிங்கம் நன்றிகூறினர்.

# யாழ்ப்பாண வரலாறு முறையாக எழுதவேண்டும்

-- குலசபாநாதன்

யாழ்ப்பாணம், திங்கள்

"தகுந்த ஆதாரங்களுடன் எழுதப்பெற்ற யாழ்ப்பாண வரலாற்றைக் கூறும் நூல்கள் இல்லாமை ஒரு பெருங்குறையாகும். இக்குறையைப்போக்க ஆண்கள் முன்வராவிட்டாலும் பெண்களாகிய நீங்களாவது முன்வந்து செயலாற்றுவீர்களென எதிர்பார்க்கிறேன்."

இவ்வாறு கோப்பாய் அரசினர் பெண்கள் ஆசிரிய பயிற்சிக்கலாசாலையில் சொற்பொழிவாற்றிய முதலியார் குல. சபாநாதன் குறிப்பிட்டார். இக் கூட்டத்துக்கு கலாசாலை விரிவுரையாளர் பண்டிதர் கே. இராசையா தலைமை வகித்தார்.

"யாழ்ப்பாணச் சரித்திரம்" என்னும் பொருள் பற்றிப் பேசிய திரு. சபாநாதன் தொடர்ந்து பேசியதாவது:-

பிறந்த பொன்னட்டைப் பற்றி ஒவ்வொருவரும் அறிந்திருக்கவேண்டியது அவசியம். தன்னட்டைப்பற்றி நன்கு அறிந்தாற்றுன் சிறந்த தலைவர்களையும் நல்ல எதிர்காலச் சந்ததியினரையும் உற்பததிசெய்ய முடியும். யாழ்ப்பாணச் சரித்திரம் சிறந்தமுறையில் எழுதப்படாமல் இருப்பது பெருங்குறையாகும். யாழ்ப்பாணச் சரித்திரம் இக்காலத்துக்கேற்ற முறையில் ஆராய்ச்சியுடன் எழுதப்படவேண்டும். இப்படியான சரித்திரங்களை எழுதும்போது சாஸனங்கள் பெருந்துணை புரிகின்றன. யாழ்ப்பாண வரலாற்றில், நாகர் நாகரிகம், கந்தரோடை நாகரிகம். சிங்கைநகர் நாகரிகம், நல்லூர் நாகரிகம் இடம்பெற்றிருப்பதைக் காணலாம். நல்லூர் சங்கிலியன்தோப்பிலுள்ள வாயிற் கட்டடம் டச்சுக்காரர் கட்டியது. அது சங்கிலிய மன்னனின் மாளிகை வாயில் அல்லவே அல்ல. யமுனரி யாழ்ப்பாணத்து அரசர்களும் அரசிகளும் உபயோகித்த ஸ்நானக்கேணியேயாகும். இவைகளுக்குப் போதிய ஆதாரங்கள் உண்டு.

திரு. குல. சபாநாதன் மேலும் பேசுகையில் நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர், முதலியார் இராசநாயகம், ஆகிய இருவரும் நமக்கு இரு சரித்திரக் கண்களாக விளங்குகின்றார்களென்றும் தாம் ஓர் யாழ்ப்பாணச் சரித்திரத்தை எழுதிக்கொண்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

ஆசிரிய மாணவி ஒருவர் நன்றியுரை கூறினர்.

## கஷ்டப்படும் கலைஞர்களுக்கு அரசாங்க உதவி

கொழும்பு, திங்கள்

வாழ்க்கையில் கஷ்டமுறும் கலைஞர்களுக்கும், எழுத்தாளர்களுக்கும் உதவிப் பணம் வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இது பற்றி கைத் தொழில் வீடமைப்பு கலாச்சார அமைச்சின் அதிகாரியொருவர் தெரிவிக்கையில், தகுதி பெற்றவர்களுக்கான பட்டியல் ஒன்று விரைவில் தயாரிக்கப்படும் என்றும் அதன் பின்னர் அவர்களுக்கு மாதாந்த உதவிப் பணம் வழங்கப்படும் என்றும் கூறினர்.

பிரசுரிப்பதற்குத் தகுதியான டரதிகளை வைத்திருக்கும் ஆசிரியர்களுக்கும் உதவியளித்து. அவற்றைப் பிரசுரிப்பதற்கும் கலாச்சாரப் பகுதி ஒழுங்குகள் செய்யும் என்றும் அவர் தெரிவித்தார்.

# சுதந்திர இலங்கையில் கலாச்சார வளர்ச்சி

காலி, திங்கள்

"பலவருடகாலம் இலங்கையில் இருந்த அந்நியர் ஆட்சியினுல், இந்நாட்டின் தேசிய கலாச்சாரம், இலக்கியம் போன்றவைகள் வெகுவாகப் பாதிக்கப்பட்டன. இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்த பின்னர் உருவாகிய அரசாங்கம் தேசிய கலாச்சாரம், இலக்கியம் ஆகியவைகளை சிறிதளவுசைதூக்கிவிட்டது. இருந்தாலும், பண்டாரநாயக்கா அரசாங்கம் தோன்றிய பின்னர் தான், தேசிய கலாச்சாரம், இலக்கியம் போன்றவைகள் உண்மையில் வளர்ச்சியடையலாயின. இதன் முன்னேற்றத்திற்காக கலாச்சார அமைச்சும் அமைக்கப்பெற்றது. தவிர, தேசிய உணர்ச்சிக்கும் ஊக்கமளிக்கப்பட்டது.

"இப்பொழுது, கலாச்சாரத்திற்கும், இலக்கியத்திற்கும் உதவியளிக்கப்படுகிறது. அதனுடன் சிங்களமும் தேசிய மொழியாக்கப்பட்டுள்ளது."

இவ்வாறு காலியில் நடைபெற்ற சாகித்திய டிநாயக் கூட்டத்தில் நீதி மந்திரி திரு சாம். பி. ஸி. பெர்னண்டோ பேசுகையிற் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசியதாவது:-

கலாச்சாரப் பிரசித்திபெற்ற இடங்களைத் திருத்துவதிலும் அங்கு வாசிகசாலைகளை நிறுவுவதிலும் கலாச்சாரப்பகுதி கவனமெடுத்துவருகிறது.

தேசிய மொழியாக சிங்களம் அமைந்த பின்னர், அம்மொழி வெகுவாக முன்னேற்றமடைந்துள்ளது. இதைக் காப்பாற்றி அதன் வளர்ச்சியில் அக்கறை செலுத்துவது இப்போதுள்ளவர்களின் கடமை மட்டுமன்றி எதிர்காலச் சந்ததியினரதும் கடமையுமாகும்."

உடுப்பிட்டி, திங்கள்

மறைந்த மாமேதை ஞானப்பிரகாச அடிகளாரின் ஞாபகார்த்த விழாவை இம்மாத இறுதியில் கொண்டாடவேண்டுமென கரவெட்டி கத்தோலிக்க வாலிபர் சங்கம் தீர்மானித்துள்ளது.




வியாபாரம்பெருக விளம்பரம்செய்க

வெளிவந்துவிட்டது!

# சூழற் கல்வி

—எட்டாம் வகுப்பு—

★ வடமாகாண ஆசிரியர் சங்கப் பாடத் திட்டத்திற்கு அமைய எழுதப்பட்டுள்ளது

★ பாடங்களுக்குத் தேவையான விளக்கப் படங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

★ இலகுவான வசனநடையில் மாணவர்களுக்குத் தேவையான விஷயங்கள் தொகுக்கப் பட்டுள்ளன.

ஆசிரியர்:

திரு. வ. மகாலிங்கம் B. A.

திருமதி சத்தியானந்தேஸ்வரி விமலேந்திரன் B.A

பதிப்பாளர்:

ஸ்ரீ காந்தா அச்சகம் புத்தகசாலை

யாழ்ப்பாணம்

# ‘யுத்தம் ஆரம்பித்தால் ஏகாதிபத்தியவாதிகள் ஒழிந்தார்கள்’

## குருஷ்சேவ் எச்சரிக்கை

### ‘ஹைட்ரஜின் குண்டுவீசினல் பிரான்ஸின் கதி என்ன?’

ஸ்டாலின்கிராட், செப். 11

“பேர்லின் பிரச்னையை சமாதானமான முறையில் தீர்ப்பதற்கான வாய்ப்புக்கள் இப்பொழுது அதிகரித்துவருவது அதிக நம்பிக்கையளிப்பதாக உள்ளது” என்று சோவியத் பிரதமர் திரு. நிகிட்டா குருஷ்சேவ் கூறினர்.

உலகிலேயே பெரிய மின்சார நிலையம் எனக் கருதப்படும் நீர்வீழ்ச்சி மின்சார நிலையத்தை நேற்று இங்கு திரு. குருஷ்சேவ் திறந்துவைத்தார். இந்த வைபவத்தில் திரு. குருஷ்சேவ் பேசுகையில் உலகில் சமாதானம் நிலைபெறவும் மற்றொரு யுத்தம் ஏற்படாமல் தடுக்கவும் சோவியத் யூனியன் முயற்சி செய்துவருகிறது என்றூர்.

“ஏகாதிபத்திய வாதிகள் யுத்தத்தை ஆரம்பித்தார்களென்றுல் அத்துடன் அவர்கள் ஒழிந்தார்கள்” என்று திரு. குருஷ்சேவ் எச்சரித்தார்.

உலகப் பிரச்னைகள் பற்றி பேச்சுவார்த்தை நடத்தவேண்டுமென்று அமெரிக்க அதிபர் திரு. கென்னடியும் பிரிட்டிஷ் பிரதமர் திரு. மாக்மிலனும் கூறிவந்திருக்கிறுர்கள். இப்பொழுது மேற்கு ஜேர்மன் அதிபர் டாக்டர் அடினரும் பிரஞ்சு அதிபர் ஜெனரல் டிகோலும் இதே கருத்தைத் தெரிவித்திருப்பது பேச்சு வார்த்தைக்கு அதிக வாய்ப்பிருப்பதாகத் தெரிகிறது. பேச்சுவார்த்தை பற்றி டாக்டர் அடினர் கூறுவது வெறும் தேர்தல் பிரச்சாரமாக இருக்க மாட்டாது என்று நம்புகிறேன்” என்று சோவியத் பிரதமர் கூறினர்.

பேச்சுவார்த்தைக்கு எப்பொழுதும் ரஷ்யா தயாராக இருக்கிறது என்று கூறிய திரு. குருஷ்சேவ் நேட்டோ, மிரட்டல்களினுல் ரஷ்யா நடவடிக்கை எடுக்க நேரிட்டது என்றூர்.

“மற்றொரு யுத்தம் வந்தால் சோவியத் யூனியனுக்கு சேதம் ஏற்படுமென்பதை சோவியத் தலைவர்கள் நன்கு அறிவார்கள். சோவியத் யூனியனின் பெரிய பரப்பு காரணமாக ஓரளவு சேதத்துடன் சோவியத் யூனியன் தப்பிவிடும். ஆனல் ஹைரஜன் குண்டுகளின் தாக்குதல் ஏற்பட்டால் மேற்கு ஜேர்மனி, பிரான்ஸ் போன்றசிறியபரப்புநாடுகளின் கதி என்னுகும் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும்” என்று திரு. குருஷ்சேவ் கூறினுர்.

## 5-வது குண்டையும் ரஷ்யா வெடித்தது!

வாஷிங்டன், செப். 11

ஐந்தாவது தடவையாகவும் சோவியத் ரஷ்யா நேற்று ஒரு அணுக் குண்டை வெடிக்கவைத்து பரீட்சை செய்ததாக அமெரிக்க அணுசக்திக் கமிஷன் அறிவித்தது. பல லட்சம் தொன் எடையுள்ள வெடிமருந்துகளைக் கொண்டு இக் குண்டு தயாரிக்கப்பட்டதாக இருக்கலாமென கமிஷன் தெரிவித்தது.

## “வார்சாவும் தயாராகவேண்டும்”

வார்சா, செப். 11

மேற்கு நாடுகள் எடுக்கும் ஆயத்த நடவடிக்கைகளைக் கருத்தில் கொண்டு வார்சா ஒப்பந்த நாடுகளும் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று போலந்துப் பிரதமர் திரு. கோமுல்கா நேற்று வார்சாவில் தெரிவித்தார்.

## 8 ஸ்டோர் கீப்பர்கள் தற்காலிக வேலைநீக்கம்

கொழும்பு, திங்கள்

8 ஸ்டோர்கீப்பர்கள் சென்ற சனிக்கிழமை உணவு கமிஷனரால் தற்காலிக வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

சாமர்ஸ் குதத்திலிருந்து ரூ.10 லட்சம் பெறுமதியான மாவை மோசடி செய்தது சம்பந்தமாகவே இவர்கள் இவ்வாறு வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

ஏற்கனவே தற்காலிக வேலைநீக்கம் செய்யப்பட்டவர்களுடன் இதுவரை 13 பேர் வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ளார்கள்.

## ஐரோப்பாவிலேயே சிறந்த தாவர ‘மியூஸியம்’

### தென்னிந்தியரகங்களும் இடம்பெற்றுள்ளன

ஹாம்பர்க், செப். 11

ஐரோப்பிய நாடுகளில் மிகச் சிறந்த தாவர மியூஸியம் மேற்கு ஜெர்மன் நகரமான ஹாம்பர்க்கிலுள்ளது. 80 வருஷமாக இருந்துவரும் இந்த ஸ்தாபனத்தில் உலகின் எல்லாப்பாகங்களிலும்வளரும் செடி, கொடி, மரவகைகள், விதைகள் எல்லாம் காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கின்றன. இவைகளை விற்கவும் இந்த ஸ்தாபனத்தில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. பொருள்கள் மிக விரிவான அளவில் சேமிக்கப்பட்டிருப்பதால்ஹாம்பர்க் பல்கலைக்கழகமே இதை ஏற்று நடத்திவருகிறது.

தாவரங்களின் படங்கள், அவைகளைப்பற்றிய வரலாறுகள், அவைகள் எந்த நாட்டில் எந்த சீதோஷ்ண நிலையில் வளர்கிறது என்பது பற்றிய விபரங்கள் எல்லாம் இங்கு சேகரித்து வைக்கப்பட்டுள்ளது.

இந்தியாவிலிருந்து முக்கியமாக தென்னிந்தியாவிலிருந்தும் இலங்கையிலிருந்தும் கிடைக்கக்கூடிய சகலவிதமான தாவரங்களும் இங்கு இடம் பெற்றுள்ளன.

கராம்பு, ஏலக்காய், கருமிளகு ஆகிய வாசனைத் திரவியங்கள், பலவித இந்திய அவரை, கொத்தவரை முதலிய ரகங்கள், மாங்காய், இஞ்சி இவைகளிலுள்ள பல ரகங்கள், முந்திரி முதலிய சகலமும் இந்த மியூஸியத்தில் இடம்பெற்றிருக்கின்றன. பெரிய தேசப்படத்தில் இப்பொருள்கள் எல்லாம் எங்கெங்கு கிடைக்கின்றன என்பது பிரகாசிக்கும் மின்வெளிச்சம் மூலம் காட்டப்படுகிறது. தேயிலை வகைகளில்டார்ஜிலிங், ஆரஞ்சு, அஸ்ஸாம் பெக்கோ, முதலிய ரகங்கள் பற்றி இங்கு விளக்கப்படுகின்றன. உலக உற்பத்தியில் இந்தியா எவ்வளவு தேயிலையை உற்பத்தி செய்கிறது, மேற்கு ஜெர்மனி எவ்வளவு உபயோகிக்கிறது என்பது பற்றிய விவரங்களும் அறிவிக்கப்பட்டுள்ளன. காப்பி, கொக்கோ, சணல், அரிசி ரகங்கள் இவைபற்றிய விவரங்களும் சேர்க்கப்பட்டுள்ளன.

இந்த மியூஸியத்தில் இடம் பெற்றுள்ள தாவரங்கள் எல்லாவற்றின் பெயர்களையும் வெளியிடுவது என்பது சாத்யமற்ற காரியம். தாவர வகைகளைக்கொண்டு செய்யப்படும் பொருள்கள் இங்கு காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

அவ்வப்போது புதுப்புது தாவர ரகங்கள் இங்கு சேர்க்கப்பட்டு வருகின்றன. இந்த மியூஸியத்தை இன்னும் திறமையாக நிர்வகித்து நடத்துவதற்கு ஹாம்பர்க் பல்கலைக் கழகம் பெரிதும் முயன்றுவருகிறது. இயற்கை மனிதர்களுக்கு உணவு, ஆடம்பரப் பொருள்களை அளித்து எப்படி உதவுகிறது என்பதை இந்த மியூஸியம் நன்கு உணர்த்துகிறது.

## இளம் கொள்ளைக்காரர் தொல்லை அதிகரிக்கிறது

கொழும்பு, திங்கள்

கொழும்பு நகரின் சில பகுதிகளில் சில சிறுவர்களும் கொள்ளைக் கூட்டத்தினரும் சேர்ந்து வழியில் செல்வோரைப் பயமுறுத்தி வழிப்பறி செய்வதாகப் பொலிஸாருக்குத் தகவல் கிடைத்துள்ளது.

இவ்வித தொல்லை பெருகிவருவதாகவும் 17 விருந்து 20 வயதுக்கிடையிலுள்ள சிறுவர்கள் இந்தக் கொள்ளைக் கூட்டத்தோடு சேர்ந்து வீதிகளிலும் ஒழுங்கைகளிலும் இவ்வாறு கொள்ளையடித்துவருவதாக உயர்தர பொலிஸ் அதிகாரியொருவர் தெரிவித்தார். இந்த இளம் கொள்ளைக்காரரின் தொல்லை காரணமாகச் சி. வீதிகளால் பெண்கள் போக்குவரத்துச் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

## கடாங்காவில் கலகம்;

### ஐ. நா. வாகனங்கள் சேதம்

எலிஸபெத்வில்லி, செப். 11

காங்கோவிலிருந்து தனியாகப் பிரிந்துள்ள கடாங்காவில் நேற்று பல கலக சம்பவங்கள் நிகழ்ந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஐ. நா. படைகளின் ஆதரவுடன் காங்கோ மத்திய அரசாங்கம் தம்மை மீண்டும் கைதுசெய்துவிட்டு சுதந்திர கடாங்காவை மத்திய அரசாங்கத்துடன் சேர்த்துக்கொள்ள லியப்போல்ட்வில்லி அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக கடாங்கா அதிபர் ஷோம்பே நேற்று குற்றம் சாட்டியதைத் தொடர்ந்தே இக்கலகங்கள் நிகழ்ந்தன.

ஷோம்பேயின் குற்றச்சாட்டை எலிஸபெத்வில்லியிலுள்ள ஐ. நா. பிரதிநிதி மறுத்தபோதிலும் கடாங்கா இளைஞர்கள் பலர் நேற்று எலிஸபெத்வில்லி வீதிகளில் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

எலிஸபெத்வில்லியில் ஐ. நா. படையைச் சேர்ந்த இந்திய துருப்புக்கள் தங்கியுள்ள ஹோட்டலை இந்த ஆர்ப்பாட்டக்காரர் தாக்க ஆரம்பித்தனர். துருப்புக்கள் ஆகாயத்தை நோக்கிச் சுட்டதும் ஆர்ப்பாட்டக்காரர் ஓட்டம் பிடித்தனர்.

ஐ. நா. படைக்குச் சொந்தமான வாகனங்கள் பலவற்றையும் இவர்கள் சேதப்படுத்திவிட்டனர்.

எலிஸபெத்வில்லியிலுள்ள ஐ. நா. படையைச் சேர்ந்த சில அணிகளை கடாங்கா சேனை சுற்றி வளைத்துக்கொண்டதாக ஒரு செய்தி கூறுகிறது.

## கைதிகள் பரிவர்த்தனை

டுனிஸ், செப். 11

பிஸர்டாவில் சமீபத்தில் நடைபெற்ற சண்டையின் போது இருதரப்பினரும் சிறைப்பிடித்த சுமார் நூறு கைதிகளை பிரான்சும், டுனிசியாவும் நேற்று பரிவர்த்தனை செய்துகொண்டன.

## பயிற்சிக்கு ஆட்சேபம்


லண்டன், செப். 11

பிரிட்டனில் ஜெர்மன் துருப்புகளுக்குப் பயிற்சியளிப்பதை ஆட்சேபித்து நேற்று லண்டனில் ஒரு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தில் சுமார் 800 பேர் கலந்து கொண்டனர்.

## ‘ஆறுமுகமானபொருள்’ வெளியீட்டுவிழா

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணக் குடாநாட்டில் உரும்பராய் ஒரு சிறியகிராமம். அங்கே சிதம்பர சுப்பிரமணியன் என்றபெயருடன் ஓர் ஆலயம். இதனை த்தகர்த்தெறிதவர்கள் போர்த்துக்கேயர்கள். தரைமட்டமாயிற்று சிதம்பர சுப்பிரமணியன் ஆலயம். வந்தார்கள் ஒல்லாந்தர். கற்கள் எல்லாவற்றையும் வண்டி வண்டியாக ஏற்றிச்சென்று யாழ்ப்பாணக் கடற்கோட்டையின் சுற்றுமதிலைக் கட்டினுர்கள். ஆலயத்துக்குப்பக்கத்தில் இடிந்த நிலையில் மண்ணுல் மூடப்பட்டுக் கிடக்கின்றது ஒரு குளம். ஆலயத்தை இடித்த வெறியர்கள் விக்கிரகங்கள் பலற்றைக் குளத்துள் எறிந்து மூடியதாக ஐதிகக்கக் கிடக்கின்றது.



உரும்பராய் சிதம்பர சுப்பிரமணிய சுவாமி கோவில்

இந்த ஆலயப் புனருத்தாரணம் 1954-ம் ஆண்டு ஆவணி மாதம் 5-ம் திகதி தொடக்கப்பட்டது. 1958-ம் ஆண்டு பங்குனி மாதம் 26-ம் திகதி நவகுண்ட மகாகும்பாபிஷேகம் நடைபெற்றது.

ஆலயத்தில் இன்னும் குறைவேலைகள் பல நிறைவேற்றப்பட இருக்கின்றன. இதற்காக ‘ஆறுமுகமானபொருள்’ என்னும் பெயருடன் ஒரு நூல் வெளிவருகின்றது. இந்நூலின் வெளியீட்டுவிழா இன்று செவ்வாய்க்கிழமை மாலை 8 மணிக்கு ஆரம்பமாக இருக்கின்றது. உரும்பராய் சிதம்பர சுப்பிரமணிய கோவிலில் நடைபெறும் இவ்விழாவுக்கு அச்சுவேலி சிவஸ்ரீ ச.குமாரசுவாமிக் குருக்கள் தலைமை தாங்குவார். இவ்விழாவில் ஈழநாடு நிர்வாக ஆசிரியர் திரு. கே. பி. ஹரன், திரு. ச. அம்பிகைபாகன் அதிபர் வைத்தீஸ்வர வித்தியாலயம், திரு. வி. தியாகலிங்கம் (இராணி அப்புக்காத்து), திரு. மு. சிவராசா விவேகானந்த சபைப் பரீட்சைக் காரியதரிசி, சிவஸ்ரீ கு. பாலசுந்தரக் குருக்கள், ஸ்கந்தவரோதயக் கல்லூரி, சித்தாந்தச் செம்மல் திரு. மு. வைரமுத்து சொற்பொழிவுகள் ஆற்ற இருக்கின்றுர்கள். இலங்கை வானெலிப் பாடகர் திரு. வே. சிவஞானம் இன்னிசை விருந்தளிக்கவும் ஏற்பாடாக இருக்கின்றது.

ஆறுமுகமான பொருளைப் பணம் கொடுத்து வாங்குவதனல் திருப்பணி நிறைவேற்றிய திருப்தியும் முருகனை ஓரளவு அறியும் வாய்ப்பும் கிடைக்கும்.

### மணிவாக்கு

படிப்பில் முதலில் பெறவேண்டுவது நடத்தை ஒழுங்குபெறுவதே யாகும்.

—விநோபாஜி


# ஈழநாடு

EELA NADU

யாழ்ப்பாணம் பிலவ ஆண்டு ஆவணி மீ 27௳ (12-9-61)

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna Telegarms EELA NADU Jaffna Phone: 389.


## ஒரு கெட்ட வழக்கம்

வீதிகள், நடைபாதைகள் முதலிய கண்ட இடங்களிலும் எச்சில் துப்பி அசுத்தப்படுத்தும் ஒரு கெட்ட வழக்கம் துரதிருஷ்டவசமாக நம்மிடையே அதிகமிருந்துவருகிறது. இதனால் பொதுமக்களின் சுகாதாரத்துக்கு எவ்வளவு கெடுதல் என்பதை விளக்கத்தேவையில்லை. இவ்விதம் துப்பாமல் தடுக்க யாழ்பபாண மாநகர சபை முன்வந்திருப்பது வரவேற்கத்தக்கதாகும்.

முதலில் துண்டுப்பிரசுரங்கள் மூலம், பொதுமக்களை கண்ட இடங்களில் துப்பவேண்டாமென்று கேட்டுக்கொள்வதென்றும் அதனால் பலன் கிடைக்காவிட்டால், சட்டரீதியாகத் தகுந்த நடவடிக்கை எடுப்பதென்றும் நிதிக்கமிட்டியில் தீர்மானிக்கப்பட்டதாகத் தெரிகிறது. துண்டுப்பிரசுர விநியோகத்தால் மட்டும் இப்பழக்கம் மாறுமா என்பது சந்தேகம். மலாயாவிலேயும் இவ்வித கெட்டபழக்கம் இருந்ததாயும், வீதிகளில் துப்புகிறவர்களைப் பிடித்து ஆளுக்கு ஐந்து அல்லது பத்துவெள்ளி தண்டம் போட்டபின்பே, இந்த பழக்கம் அடியோடு நின்று தெருக்கள் மிக சுத்தமாக இருப்பதாயும் அதுபோலவே இங்கும் சட்டம் செய்யவேண்டுமென்றும், கோலாலம்பூர் நகரசபையிலே கமிஷனராக இருந்து ஓய்வு பெற்ற ஒரு தமிழ் அன்பர் தெரிவிக்கின்ருர். தங்கள் சுகாதாரத்தையும், நகரின் சுத்தத்தையும் கருதி இவ்விஷயத்தில் மாநகரசபை எடுக்கும் நடவடிக்கைகளில் பொதுமக்கள் பூரணமாக ஒத்துழைக்கக் கடமைப்பட்டிருக்கிருர்கள்.

யாழ்ப்பாண நகரத்தில் மட்டுமன்றி, இத்தீவெங்குமே இந்தக்கூடாதவழக்கம் இருந்து வருகிறது. இதை திடீரென்று மாற்றமுடியாதுதான். என்ருலும் நகரங்கள், கிராமங்கள் முதலிய பல பகுதிகளிலும் தெருக்களில் துப்பி அசுத்தப்படுத்தாமல் தடுக்க ஸ்தலஸ்தாபனச்சட்டப்படி நாடெங்கும் நடவடிக்கை எடுக்க ஏற்பாடு செய்தால் இந்தப் பழக்கம் மாறவும், வீதிகள் சுத்தமாகி, மக்களின் சுகாதாரமும் பாதுகாக்கப்படவும் கூடும்.

—

## ஆசிரியர்கள் இடமாற்றம்

இடமாற்றம்வேண்டும் ஆசிரியர்கள், இம்மாத முடிவுக்குள்ளாக மனுச்செய்துகொள்ள வேண்டுமாம். இன்றேல் 1963-ம் வருடம் ஜனவரிவரை இடமாற்றம் பெற முடியாதென்றும், இவ்விஷயமாக ஒரு திட்டத்தை கல்வி இலாகா தயாரித்துள்ளதாகவும், இது கண்டிப்பாகப் பின்பற்றப்படுமென்றும் ஒரு செய்தி தெரிவிக்கின்றது ஏற்கெனவே மனுச் செய்தவர்களில் 880 ஆசிரியர்களை இடமாற்ற ஒழுங்கு செய்துள்ளனராம். கணவனும் மனைவியும் தூரத்திலுள்ள வெவ்வேறு பள்ளிக்கூடங்களில் வேலை பார்ப்பின் அவர்களை ஒரே பள்ளிக்கூடத்தில் இருந்து கடமை பார்க்க ஒழுங்கு செய்யப்படுமென்றும், வைத்திய காரணங்களுக்கும் இடமாற்றம் வழங்கப்படலாமென்றும் இத்திட்டம் கண்டிப்பாக அமுல் நடத்தப்படுமென்றும் உதவி கல்வி மந்திரி தெரிவிக்கின்ருர். இச்செய்தி எல்லா ஆசிரியர்களாலும் வரவேற்கப்படும்.

பல பள்ளிக்கூடங்களையும் அரசாங்கம் பொறுப்பேற்ற பின், திடீர் திடீரென தங்களை வேறிடங்களுக்கு மாற்றிவிடுவார்களோ என்ற பீதி பொதுவாகப் பல ஆசிரியர்களுக்கு மூண்டு. ஆனல் ஆசிரியர்களின் வசதியைக் கவனித்து, அவர்கள் செய்யும் மனுவின்மீதே இடமாற்றம் செய்யப்படுமாயின், ஆசிரியர்கள் அதிக நிம்மதியாக இருந்து தங்கள் கடமைகளைப் பார்க்க முடியும்.

ஆசிரியர்கள் எவரையும் இடமாற்றம் செய்யும்படி சிபார்சு செய்ய வேண்டாமென்று எம். பி.க்களுக்கும் ஒரு விசேஷ வேண்டுகோள் விடுக்கப்படுமாம் கல்வி சம்பந்தமான இவ்விஷயத்தில் அரசியல் வாதிகளின் குறுக்கீடுகள் எதுவும் இராமல் தடுப்பது அவசியம். ஆசிரியர் இடமாற்ற விஷயத்தில் பல பல ஊழல்கள் இருப்பதாகப் புகார்கள் உண்டு. கல்வி நிர்வாகப் பொறுப்பை பல பிரதேசங்களுக்கும் பிரித்துக் கொடுத்து, ஒரு திட்டமான முறையையே இவ்விஷயமாகப் பின்பற்றவேண்டுமென்று ஒழுங்கு செய்தால், கல்வி அமைச்சின் மண்டையிடி குறைவதுடன், ஆசிரியர்கள் திருப்தியுடன் தங்கள் கடமையை மேலாகச் செய்ய முடியும்.

# தமிழ்வளர்த்த தாமோதரனர்

## இன்று 130-வது பிறந்த தினம்

— சர்மா —

தமிழ் நூல்களைத் தொடுவதே பாவம் என்ற நிலை பத்தொன்பதாம் நூற்ருண்டில் இருந்துவந்தது. அந்நியமொழி, அந்நியகலாச்சாரம் என்பவற்றைப் பின்பற்றலே உய்யும் வழி என நம்பிய காலம் அது. அந்தக் காலத்திலே தான் தமிழின் தொன்மையை உணர்த்தும் நூல்கள் அச்சுவாகன மேறின. சங்க இலக்கிய நூல்கள் ஏட்டுப் பிரதிகளாக இருந்தமையால் அவற்றைத் தீண்டுவார் தொகை அருகியது.

நாவலர் அவதரித்த பின் புதிய உணர்ச்சி உருவாகியது. சி. வை. தாமோதரம்பிள்ளை நாவலருடன் இணைந்து தமிழ்ப் பணியாற்றினர். நாவலருக்குப் பத்தாண்டு இளையவர் தாமோதரனர். இவர் ஓரிடத்திற் குறிப்பிடும் கருத்துக்கள் சிந்திக்கற்பாலன.

"எத்தனையோ திவ்விய மதுர கிரந்தங்கள் காலாந்திரத்தில் ஒன்றன்பின் ஒன்ருக அழிகின்றன. சீமான்களே! இவ்வாறு இறந்தொழியும் நூல்களில் உங்களுக்குச் சற்றுவது கிருபை பிறக்க வில்லையா? ஆச்சரியம்! ஆச்சரியம்!! அயலான் அழியக் காண்கிலும் மனந் தளம்புகின்றதே! தமிழ் மாது நும் தாயல்லவா! இவள் அழிய நமக்கென்னென்று வாளாவிருக்கின்றீர்கள்? தேசாபிமானம், பாஷாபிமானம், மதாபிமானம் என்று இவை இல்லாதார் பெருமையும் பெருமையாமா? இதனைத் தயைகூர்ந்து சிந்திப்பீர்களாக?"

இக்கருத்துக்கள் எமக்கு அன்றுள்ள நிலையைத் தெளிவாக்குகின்றன. இந்த நிலைமையிலிருந்து தமிழ் மக்களைத் தெருட்டி தமிழ் மறுமலர்ச்சி இயக்கத்திற்கு அத்திவாரமிட்டார் சி. வை. தாமோதரம் பிள்ளை அவர்கள். தமிழ் வளர்த்த தாமோதரம்பிள்ளை நாவலர் பெருமானிடம் தாம் வெளியிடவிருக்கும் நூல்களிற்காணப்படும் ஐயங்களைச் சொல்லி அவற்றைக்களைந்து நூல்களை வெளியிட்டார். இவர் பரிசோதித்து அச்சுவாகன மேறிய நூல்கள், தொல்காப்பியம், எழுத்ததிகாரம், நச்சினர்க்கினியருரை, ஐந்தியல் நச்சினர்க்கினியருரையும் ஏனைய பேராசிரியருரையுமாயுள்ள பொருளதிகாரவுரை, ஆறுமுகநாவலரால் பரிசோதிக்கப்பட்ட தொல்காப்பியத்துச் சொல்லதிகாரம் சேருவரையருரை, இறையவனரகப் பொருளுரை. இலக்கண விளக்கவுரை, வீரசோழியவுரை போன்ற இலக்கணநூல்களும், சூளாமணி, தணிகைப்புராணம் என்னும் இலக்கிய நூல்களும் ஆகும். பிள்ளையவர்கள் சூளாமணி வசனம், சைவ மகத்தும், நட்சத்திரமாலை, கட்டளைக்கலித்துறை இலக்கணம், ஆரும், ஏழாம் வாசகப் புத்தகங்களையும் இயற்றி வெளியிட்டார்கள்.

பிள்ளையவர்கள் ஆசிரியராகவும், தமிழ்ப்பண்டிதராகவும பத்திரிகையாசிரியராகவும், நியாயவாதியாகவும், கடமையாற்றியபோதிலும் தமது ஓய்வு நேரங்களைத் தாய்மொழி வளர்ச்சியிற் கழித்தார். சில ஏடுகள் பழுதடைந்த நிலையில் இருந்தபோதிலும், அவற்றைப் பரிசோதித்து வெளிப்படுத்தினர். அந்தக் காலத்தில் ஏடுகளுக்குக் குற்றுக்கள் போடுவது கிடையாது. கறையான்கள் அவ்வேடுகளுக்குக் குற்றுக்கள் போடும் பணியைச் செய்தனவாம். பிள்ளையவர்களின் பாட்டொன்றில் செல்துளைத்த துளையன்று என்ருெரு வரி வருகிறது. பிள்ளையவர்களின் அரும் பெரும் தொண்டுகளைப் பாராட்டிச் சென்னை அரசாங்கத்தார் 'இராவ்ர் பகதூர' என்னும் பட்டத்தையீந்து கௌரவித்தனர். இருபதாம் நூற்ருண்டு ஆரம்பகதில் இறைவனடி சேர்ந்தார்.

இன்று இப்பெரியாரின் 130 வது பிறந்த னமாகும்' இத்தினத்தில் அவரை, 'செல்லரித்துப் பொட்டுர்ந்து சீர்சிதைந்தஏடுகளை, யல்லறவசிவிட்ட வாலறிஞன்' என்று போற்றுவோமாக.

# மக்களிடையே சேமிப்பு பழக்கத்தை வளர்க்க வழிகள்

சேமிப்பு வழக்கத்தை மக்களிடையே பிரபலப்படுத்த மேற்கு ஜெர்மன் அரசாங்கமும், வங்கிகளும் ஒரு இயக்கத்தையே ஆரம்பித்து நடத்துகின்றன.

சேமிப்பு இயக்கம் மிகவும் பிரபலமடைந்துள்ளதற்கான இரு காரணங்களாவன: பணவீக்கம் காரணமாக வயதானவர்கள் சேமித்துவைத்த நிதி எல்லாம் இரு முறை இழக்கப்பட்டுவிட்டன. இதனல் சேமிப்பு விஷயமாக உற்சாகம் இல்லாமலிருந்தது. தனிப்பட்டவர்கள் சேமிப்புத் தொகையளவு 8 சத விகிதமே இருந்தது. யுத்தம் முடிந்தபின் சில வருடங்களாக சேமிப்பு விஷயமாக அதிக உற்சாகம் காணப்படவில்லை. மூலதன மார்க்கெட் இயங்கப்படவில்லை என்பதுடன் வரிச்சலுகைகள் எதுவும் அப்போது அளிக்கப்படவில்லை.

ஆனல் இன்று மேற்கு ஜெர்மனியில் மூலதன மார்க்கெட் திறமையாகச் செயல்பட ஆரம்பித்துவிட்டது. ஜெர்மானியர் சொத்துக்கள் வாங்குவதற்கு உற்சாகமளிக்கப்பட்டனர் சேமிப்புத் தொகைகளுக்கு வரி விதிப்பிலிருந்து விலக்களிக்கப்பட்டது. ஒரு குறிப்பிட்டகால அளவுக்கு பணம் சேமிப்பில் போடப்பட்டால் 25 சத விகித "பிரிமியம்" தொகையும் கட்டப்படும் என்ற ஏற்பாடு செய்யப்பட்டது. கட்டிடச் சங்கங்கள் பல சலுகைகளை வீடுகள் கட்டிக் கொள்பவர்களுக்கு அளிக்க முன் வந்தன. ஆயுள் இன்ஷூரன்ஸ் செய்துகொள்ளப்பட்ட தொகை வரி விதிப்பிலிருந்து விலக்களிக்கப்பட்டது. சேமிக்க வேண்டும் என்ற விருப்பமுள்ளவர்களுக்கு அரசாங்கம் சகல விது உதவிகளையும் செய்ய முன் வந்தது.

இந்த சேமிப்பு திட்டங்களில் மிகவும் வெற்றிகரமானது "மக்கள் பங்குகளில் முதலீடு செய்யும் திட்டம்". அரசாங்கம் ஏற்று நடத்திய தொழில்கள் பல பொது மக்கள் பங்குகள் பெறும் தொழில்களாக மாற்றப்பட்டன. சிறிய பங்குகளாக இவை பிரிக்கப்பட்டு குறைந்த தொகைக்கு வாங்கும்படியாக இப்பங்குகள் அமைக்கப்பட்டன. இதனல் மிகக் குறைந்த வருமானமுள்ளவர்களும் தொழிலாளர்களும் கூட பங்குதாரர் வாங்க முடிந்தது. இதனல் சேமிப்பு வளர்ந்தது. மேற்கு ஜெர்மனியில் உள்ள 20 லட்சம் பங்குதாரர்களில் 66 சத விகிதத்தினர் மிகக் குறைந்த பங்குகளையே பெற்றுள்ளனர். தனியார் துறை தொழில்களும் பொது மக்கள் பங்குகள் வாங்கும் படியான வசதிகளை அளிக்கின்றன.

மேற்கு ஜெர்மனியின் பார்லிமெண்ட் தொழிலாளர்கள் சொத்து வாங்குவதை உற்சாகப்படுத்தும் சட்டம் ஒன்றை நிறைவேற்றியிருக்கிறது. இதன்படி கம்பெனிகள் தங்களிடம் வேலை செய்யும் சிப்பந்திகளுக்கு வருஷத்தில் 312 ஜெர்மன் மார்க்குகள் வரி விலக்குடன் கூடிய போனஸ் அளிக்க வகை செய்கிறது. சம்பாதித்த தொகைகளை அவர்கள் பங்குகளாகப் பெறலாம். ஆனல் ஐந்து வருடகாலம் அத்தொகையை அவர்கள் வாங்கக்கூடாது. அதிகப்படியாகக் கிடைக்கும் வருமானத்தை முதலீடு செய்யும் வழக்கம் தொழிலாளர்களிடையே அதிகரித்து வருகிறது. நிதி விஷயங்களிலும் பூரண ஜனநாயகத் தத்துவத்தைப் பின்பற்ற மேற்கு ஜெர்மன் அரசாங்கம் விரும்புகிறது.

—

## மக்கள் வங்கி பண உதவி

கொழும்பு, திங்கள்

விவசாய இலாகாவினல் தேர்ந்தெடுக்கப்படும் கிராம சபையின் கீழுள்ள ஒரு பகுதி மக்கள் கடன்தொல்லையிலிருந்து நிவாரணம் பெறுவதற்காக மக்கள் வங்கி முதல் முறையாக நடவடிக்கை எடுக்கவிருக்கிறது.

விவசாய இலாகா, கூட்டுறவு இலாகா, குடிசைக்கைத் தொழில் இலாகா ஆகிய இலாகாக்களின் ஒத்துழைப்போடு மக்கள் வங்கி இந்த நடவடிக்கையை மேற்கொள்ளும்.

கடன் தொல்லையால் அதிக கஷ்டமுறும் மக்களுள்ள கிராமமே முதலில் இவ்வித உதவி செய்வதற்காக தேர்ந்தெடுக்கப்படும்.

## ஐயாறன் எழுதுவது

கொழும்பிலிருந்து ஓர் அன்பர் எழுதுவதாவது:

சந்நிதி, நயினதீவு, நல்லூர் முதலாய திவ்விய தலங்களுக்கெல்லாம் எம்மனை ஈழநாடு மூலமாக அழைத்துச் செல்லும் தங்களுக்கு நன்றி செலுத்துகிறேம். வாழ்க ஈழநாடு, வாழ்க ஐயாறன்!

யாழ்ப்பாணப் பெரியாரையும் இந்திய தூதுவருடன் சென்று தரிசித்து எம்மையும் அத்தரிசனத்தில் பங்கு பெறச் செய்தீர்கள். நீடூழி வாழ்க!

மங்களூர் ஆனந்தாச்சிரமத்திலிருந்துவெளியாகும் 'விஷன்' என்ற ஆங்கில சஞ்சிகை கிடைத்ததோ? சுவாமி ராமதாஸ் அவர்களுக்கு உடல் நலம் சரியில்லை என்று ஒரு செய்தி அதில் வெளியாகியுள்ளது. நுரை ஈரல் சற்றே வீக்கம் கண்டுள்ளதாக டாக்டர்கள் கருதுவதாயும், தேவையான சிகிச்சை பெறுவதாயும், பல அன்பர்களுக்கும் கடிதம் எழுதுவதை சுவாமி நிறுத்திவிட்டதாயும் செய்தி வெளியாகியுள்ளதுடன், அன்னை கிருஷ்ணபாயின் மிக உருககமான பிரார்த்தனையும் பிரசுரமாகியுள்ளது.

சுவாமி அவர்கள், உலக நலனுக்காக தம்மை சீக்கிரம் குணப்படுத்திக்கொள்ள வேண்டுமென்றும், அன்பர்கள் சேர்ந்து 11 கோடி நாம ஜபம இதற்காக ஜபித்தோ, எழுதியோ வரவேண்டுமென்றும் அன்னை அவர்கள் சங்கற்பித்திருக்கிருர்கள்.

அன்னையாரின் பிரார்த்தனையில் நாமும் இயன்றவரை கலந்து கொள்வோமாக. உலக நலனுக்காக சுவாமியின் உடல் இன்னும் சில காலம் நிலைத்திருக்க வேண்டுமென்பதே எமது பேரவா. 'வேண்டுவார் வேண்டுவதை அவ்வள்ளல் ஈவார்தானே…"

* * *

இதே செய்தியை யாழ்ப்பாணத்திலுள்ள ஓர் அன்பரும் இரண்டு நாட்களுக்கு முன் எனக்குத்தெரிவித்து, 'விஷன்' பத்திரிகையையும் அன்புடன் தந்தார். சுவாமிக்கு உடல் நலம் சரியில்லை என்று அறிந்தது முதல் தமக்கு மனம் நிம்மதியின்றி, இரவில் தூக்கமுமில்லை என்றும், சுவாமியின் உடல் நிலையைப்பற்றி ஓர் அவசரத் தந்தி அடித்ததாயும் "உடல் குணமாகி வருகிறது கவலைப்படத் தேவையில்லை" என்று பதில் தந்தி கிடைத்த பின்பே தாம் நிம்மதி அடைந்ததாயும் கூறி, தாம் நாமஜபம் செய்து வருவதாயும் தெரிவித்தார்.

சுவாமி ராமதாஸ் நீடூழிவாழ்க!

* * *

நல்லூர் திருவிழாவைக் காண கொழும்பிலிருந்து வந்த ஓர் அன்பர், இம்முறை திருவிழா மிகச்சிறப்பாக நடந்ததாக மகிழ்ச்சியுடன கூறி, சில நல்ல யோசனைகளைத் தெரிவித்தார்.

1. தேகதிடமும் உயரமும் உள்ள தொண்டர்களை நியமிக்கவேண்டும்.

2. அங்கப்பிரதஷ்சணம், அடி அழித்தல் இவற்றைச் செய்யும் பகதர்களுக்கு அதிக வசதி அளிக்கவேண்டும். தேருக்குப் பின் அவர்களுக்காக சுமார் 50 கஜதூரம் கூட்டம் நெருங்காமல் தொண்டர்கள் பார்த்துக் கொள்ளலாம். உள்வீதியில் குறித்த நேரங்களில தான் அங்கபபிரதட்சணம், அடி அழித்தல் செய்யலாமென்று நிர்ணயித்தால் நல்லது.

3. கோவிலுக்குள் பூசைவேளையில் ஒரு சந்நிதியில் தரிசிப்பவர்கள் பல்வேறு சந்நிதிகளுக்கும் குருக்களுடன் விரைந்து ஓடி நெருக்காமல், ஓரிடத்திலிருந்தே அமைதியாக தரிசிக்கவேண்டும். மடுமாதா உற்சவத்தில் பக்தர்கள் அமைதியாகவும் ஒழுங்காகவும் இருந்து


(5ம் பக்கம் பார்க்க)

## இலட்சுமித் தோட்ட விசாரணை

# 'சிங்களத்தொழிலாளரை வேலைக்கமர்த்தியதை இ.தொ.கா. எதிர்க்கவில்லை'

## கம்பனி டைரக்டர் சாட்சியம்

கொழும்பு, திங்கள்

இலட்சுமித் தோட்ட விசாரணை வெள்ளிக்கிழமை காலை மீண்டும் ஆரம்பமானபொழுது லூவிஸ் பிறவுண் கம்பெனி டைரக்டர் திரு. ஸி. ஆர். என். டி' சில்வா தொடர்ந்து நான்காவது நாளாகச் சாட்சியமளித்தார்.

தோட்ட நிர்வாகத்தின் சார்பில் ஆஜரான திரு. ஜெயவிக்கிரமா அவரைக் குறுக்கு விசாரணை செய்தார். திரு. சில்வா சாட்சியமளிக்கையில் இலட்சுமித் தோட்டத்தின் ஏஜண்டான கொழும்பிலுள்ள லூவிஸ் பிறவுண் கம்பெனிக்கு தோட்டத்துரை ஹார்லி அனுப்பும் மாதமிருமுறை அறிக்கைகளை வாசித்துக் காட்டினர்.

1960-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15-ந் திகதி அறிக்கையை திரு. சில்வா வாசித்தார். "ஜூன் மாதம் வேலை நிறுத்தம் ஆரம்பமானதும் சிங்களத் தொழிலாளர்கள் தோட்டத்துக்கு வந்து சேர்ந்தனர். வேலை நிறுத்தத்தைத் தொடர்ந்து நடத்துவதற்காக தொழிலாளர்களிடம் பணம் திரட்டப்பட்டது. ஆனல் வேலை நிறுத்தம் செய்பவர்களுக்கு நிவாரண உதவியாக இலங்கைத் தொழிலாளர் காங்கிரசினல் ஒரு சதம் கூடச் செலவிடப்படவில்லை. நான்கு சிங்களத் தொழிலாளர் மீது இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் அங்கத்தவர்கள் சுட்டனர். வில்லியம் என்பவர் மாண்டார். மற்றவர்கள் காயமடைந்தனர். என்னைக்(திரு ஹார்லி) கொல்வதற்கு செய்யப்பட்ட முயற்சி தோல்வியடைந்தது." என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

1960-ம் ஆண்டு செப்டம்பர் 15-ந் திகதி எழுதப்பட்ட அறிக்கையில் துப்புரவாக்கும் புதிய பகுதியிலிருந்து தொழிலாளர்கள் எல்லோரும் போய் விட்டனர்" என்று குறிப்பிடப்பட்டிருந்ததை திரு. சில்வா வாசித்தார்.

ஜெய: வேலை நிறுத்தம் ஜூன் மாதத்தில் ஆரம்பமானது!

சாட்சி: ஆம்.

ஜெய: வேலை நிறுத்தத்தின் பின் சிங்களத் தொழிலாளர் வரத் தொடங்கினர்கள்.

சாட்சி: ஆம்.

1960-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 15-ந் திகதி அறிக்கையை திரு. சில்வா வாசிக்கையில் 1960-ம் ஆண்டு டிசம்பர் 7-ந் திகதி நாடு முழுவதும் வேலைநிறுத்தம் ஆரம்பிப்பதற்கு இ. தொ. கா. திட்டமிட்டுள்ளது என்ருர்.

திரு. சில்வா தொடர்ந்து சாட்சியமளிக்கையில் இவ்விவகாரம் சம்பந்தமாக ஒரு மகாநாடு நடைபெற்றதென்றும் இந்த மகாநாட்டில் பிரதம மந்திரி, நிதிமந்திரி, தொழில் தேசியமய மந்திரி, தொழில் தேசிய சேவை அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி ஆகியோர் கலந்து கொண்டனரென்றும் கூறினர். பிற்பகல் 4-30 மணிக்கு ஆரம்பமான இந்த மகாநாடு இரவு 7 மணி வரை நடைபெற்றதென்று தெரிவித்த திரு சில்வா பொலிசாருக்குக் கொடுத்த பணம் பற்றி நிதிமந்திரி தம்மைக் கேட்டாரென்றும் கூறினர்.

ஜெய: முதலாளிமார் சம்மேளனத்தில் நீர் ஒரு காலத்தில் அங்கத்தவராக இருந்தீர்!

சாட்சி: ஆம்.

ஜெயா: முதலாளிமார் சம்மேளனத்திடமிருந்து உமக்கு மாதாந்த அறிக்கை வருவதுண்டு?

சாட்சி: ஆம்.

ஜெயா: தீவின் முழுவதிலுமுள்ள தோட்டங்களில் என்ன நடைபெறுகிறதென்பதைஅந்த அறிக்கைகளிலிருந்து நீர் அறிந்து கொள்வீர்?

நான் தோட்டத்துக்குக்கும் சென்றிருக்கிறேன்.

சாட்சி: ஆம்.

ஜெய: தோட்டத்தில் புதிய தொழிலாளர் வேலைக்கு எடுக்கப்பட்டதால் இ. தொ. கா. தனது வேலை நிறுத்தத்தை வெற்றிகரமாக்க முடியாது போய்விட்டது?

திரு. ஜி. ஜி. குறுக்கிட்டு, "திட்டமிட்ட காடைத்தனத்தாலும் காலித்தனத்தாலும் தான்" என்ருர்.

சாட்சி: லட்சுமித் தோட்டத்தில் நடைபெறுவது ஒரு தொழில் தகராறல்லவென்றும் நிர்வாகத்துக்கும் யூனியனுக்குமுள்ள ஒரு தகராறென்றும் இதன் விளைவாக இதர தோட்டங்களும் இதில் சம்பந்தப்பட்டுள்ளனவென்றும் முதலாளிமார் சம்மேளனம் சுட்டிக்காட்டியது.

இதன்பின் இ. தொ. கா. வின் சார்பில் ஆஜரான வழக்கறிஞர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் திரு. சில்வாவை மீண்டும் விசாரணை செய்தார்.

ஜி. ஜி.: தோட்டத்தில் நிர்வாகம் சம்பந்தமாக உள்ள சகல புத்தகங்களையும் நீர் பார்த்து வைத்ததுண்டா?

சாட்சி: மாதமிருமுறை அனுப்பப்படும் சாராம்ச அறிக்கைகளில்தான் எனக்குப் பரிச்சயம் உண்டு.

ஜி. ஜி.: தோட்டத்தில் வைக்கப்படும் புத்தகங்களைப் பரிசீலனை செய்வதற்கு உமக்குச் சந்தர்ப்பம் கிடைத்ததில்லை!

சாட்சி: இல்லை.

ஜி. ஜி.: தோட்ட வெளி வேலை சம்பந்தமான எல்லாப் புத்தகங்களையும் உமக்குத் தெரியுமா?

சாட்சி: இல்லை.

ஜி. ஜி.: தோட்ட வெளி வேலை சம்பந்தமாக நாளாந்த அலுவல்களைக் குறித்துக் கொள்ளும் ஒரு குறிப்புப் புஸ்தகத்தை தோட்டத்துரை வைத்திருப்பதுண்டு என்று நீர் சொன்னீரே?

சாட்சி: ஆம்.

ஜி. ஜி.: இலட்சுமித் தோட்டத்திலுள்ள வெளிவேலைப் புத்தகத்தை நீர் பார்த்திருக்கிறீரா?

சாட்சி: இல்லை.

ஜி. ஜி.: தொழிலாளர்கள் தங்கள் புகார்களைத் தெரிவிப்பதற்கென ஒரு புஸ்தகம் இருப்பது உமக்குத் தெரியுமா?

சாட்சி: இல்லை.

ஜி ஜி. தோட்ட வெளிவேலை சம்பந்தமாக யூனியன் ஒரு குறிப்புப் புத்தகம் வைத்திருந்ததென்பது உமக்குத் தெரியுமா?

சாட்சி: இல்லை.

ஜி. ஜி. எந்தெந்த விஷயங்களில் சபையின் முன் அனுமதியை தோட்டத்துரை பெற்றுக் கொள்ள வேண்டுமென்பதை தயவு செய்து கமிஷனுக்குத் தெரிவிப்பீரா?

சாட்சி: ஒரு தடவை ஒதுக்கப்பட்ட வருடாந்த உத்தேச செலவுத் திட்டத்தை மிஞ்சி செலவு செய்ய முடியாது.

ஜி. ஜி. இதுவரை நிரந்தர உத்தரவுகள் எதுவும் உண்டா?

சாட்சி: இலட்சுமித்தோட்டத்தைப் பொறுத்தவரையில் நிரந்தர உத்தரவுகள் எதுவும் இல்லை. ஆனல் இதர தோட்டங்களுக்கு நிரந்தர உத்தரவுகள் இருக்கின்றன.

ஜி. ஜி.: பிரதம மந்திரி, நிதி மந்திரி, தொழில் மந்திரி, ஆகியோர் கலந்து கொண்ட ஒரு மகாநாடு பற்றிச் சொன்னீர். உமது தேவைக்காகவாவது நீர் உமது சொந்த முறையில் அந்த மகாநாடு பற்றிக் குறிப்பெதுவும் எடுத்தீரா?

சாட்சி: இல்லை. இலட்சுமித் தோட்ட டைரக்டர் சபைக்கு நான் எழுதினேன். (இக்கடிதம் வாசிக்கப்பட்டது.)

ஜி. ஜி.:1960-ம்ஆண்டு ஜூன் 22-ந் திகதி நடைபெற்ற மகாநாட்டின் குறிப்புப் பற்றிக் கவனிப்பீரா? அந்த மகாநாட்டில் கலந்து கொண்ட யூனியன் பிரதிநிதிகள் வேலைநிறுத்தம் செய்யத் தீர்மானித்ததைக் காட்டக் கூடிய குறிப்பு எதுவும் இல்லையே!

சாட்சி: அந்தக் குறிப்பில் அதுபற்றி ஒன்றும் இல்லை.

ஜி. ஜி. தொழிலாளர்களை வேலை நீக்கம் செய்வது சம்பந்தமாக தோட்டத்துரைக்கு நீர் உத்தரவு பிறப்பித்தீரா?

சாட்சி: அந்த விஷயம் தோட்டத் துரையின் உசிதத்தைப் பொறுத்தது.

ஜி. ஜி.: இது விஷயமாகத் (தொழிலாளர்களை வேலை நீக்கம் செய்வது) தோட்ட முதலாளிமார் சம்மேளனம் சகல தோட்டத் துரைமார்களுக்கும் உத்தரவு அனுப்பியுள்ளது. இந்த உத்தரவுகளை சம்மேளன அங்கத்தவர்கள் மட்டுமல்ல அங்கத்தவர்களல்லாதவர்களும் கூட பின்பற்றுவதுண்டு?

சாட்சி: ஆம்.

### தொழிலாளர் எதிர்த்தனரா?

ஜி. ஜி.: 1959-ம் ஆண்டு ஒக்டோபர் மாதத்துக்கு முன் சிங்களத் தொழிலாளர்களை வேலைக்கு எடுப்பதை இ. தொ. கா, பிரதிநிதிகள் எதிர்த்தார்களா?

சாட்சி: எனக்குத் தெரிந்த வரையில் இல்லை.

ஜி. ஜி.: கடிதத் தொடர்புகள், விவாதங்கள், பேச்சு வார்த்தைகள் ஆகியவைகளில் சிங்களத் தொழிலாளர்களை வேலைக்கமர்த்துவதை யூனியன் எப்போதாவது எதிர்த்ததுண்டா?

சாட்சி: இல்லை.

ஜி. ஜி: இ. தொ. கா. பிரதிநிதிகள் கையொப்பமிட்ட துண்டுப் பிரசுரங்களை நீர் பார்த்திருக்கிறீரா? அவர்களை உமக்குத் தெரியுமா?

சாட்சி: நான் பார்த்திருக்கிறேன். ஆனல் அவர்களை எனக்கு நேரடியாகத் தெரியாது.

ஜி. ஜி: அபபடியானல்துண்டுப் பிரசுரங்களை அவர்கள் வெளியிட்டார்களென்று நீர் எப்படிச் சொல்வீர்?

சாட்சி: துண்டுப் பிரசுரங்களில் அவர்களின் பெயர்களிருந்தன.

ஜி. ஜி: இது சம்பந்தமாக நீர் கூறியதை, உம்மால் அத்தாட்சிப் படுத்தமுடியாதல்லவா?

சாட்சி: ஆம்.

ஜி. ஜி: 1960-ம் ஆண்டு ஜூலை மாதம் நடைபெற்ற தேர்தல் முடிவடைந்ததும் திரு. தொண்டமான் நியமன எம். பி. யாக்கப்பட்டது உமக்குத் தெரியும்.

சாட்சி: ஆம்.

ஜி. ஜி: சட்டவிரோதவேலை நிறுத்தம் என்பதைப்பற்றிய உமது கருத்து என்ன?

சாட்சி: சமரசத்துக்கு முயற்சி செய்யாமலே வேலை நிறுத்தம் செய்வது.

ஜி. ஜி: ஒரு வேலை நிறுத்தத்தை நிர்வாகிகள் (முதலாளிமார்) நியாயமற்றதென்று கருதினல் அதை நியாயமற்றதென்றே கருதுவீரா?

சாட்சி: தொழில் இலாகாவின் ஒழுங்கு முறைகளின்படி நடக்காத ஒரு வேலை நிறுத்தத்தை சட்ட விரோத வேலை நிறுத்தம் எனலாம். அதாவது தகராறை சமமாகத் தீர்த்துக்கொள்வதற்கு யூனியன் முதலில் முயற்சி செய்யவேண்டும் இது தவறினல் வேலை நிறுத்தத்துக்கு முன் ஆறு நாள் முன்னறிவித்தல் கொடுக்கப்படவேண்டும்.

ஜி. ஜி: தோட்டத்தில் 500 பேர் வேலை செய்யாவிட்டால் தோட்டம் 2500 ரூத்தல் தேயிலையை இழந்து விடும். இது சரியா?

சாட்சி: ஆம்.

ஜி. ஜி: ஒக்டோபர் மாதத்துக்கு முன் இலட்சுமித் தோட்டத்தில் பறிக்கப்பட்டு வந்த தேயிலையின் அளவு உமக்குத் தெரியுமா?

சாட்சி: தீடீரென்று அளவு விபரம் கூற முடியாது.

ஜி. ஜி: தோட்ட முதலாளிமார் சம்மேளனத்திலிருந்து ராஜினமாச் செய்ய வேண்டுமென்ற யோசனையை யார் தொடங்கியவர். திரு. ஹார்லியா?

சாட்சி: நாங்கள் ராஜினமாச் செய்வதா? இல்லையா? என்பது டைரக்டர்களின் பொதுவான கேள்வி.

ஜி. ஜி: வேறு என்ன காரணங்கள்?

சாட்சி: இது தொழிற் தகராறல்ல.

ஜி. ஜி: அதையே வேறுவிதமாகச் சொன்னல், அது திரு. ஹார்லியையும் தோட்ட யூனியன் பிரதிநிதிகளையும் சம்பந்தப்பட்ட விஷயம் இல்லையா?

சாட்சி: ஆம்.

ஜி. ஜி. :-தோட்டத்திலுள்ள சிங்களத் தொழிலாளர்களுக்காகப் பேசாத இ. தொ. கா. யூனியன் ஒன்றை திரு. ஹார்லி விரும்பவில்லை!

சாட்சி:- அப்படியல்ல.

ஜி. ஜி: திரு ஹார்லி ஆட்சேபித்தது தான் எதற்கு?

சாட்சி: அங்கத்தவர்களைத் திரட்டுவதற்கு யூனியன் காடைத்தனத்தையும் பலாத்காரத்தையும் உபயோகித்ததைத் தான் திரு. ஹார்லி எதிர்த்தார்

---

### வாழ்வு மலர்ச்சியுற வழி
### சிவாநந்தர் சற்போதனை

கொடிகாமம், திங்கள்

"பொய் களவு முதலான தீய குணங்களிலிருந்து நம்மை பாதுகாத்து தூய சிந்தனைகளுடனும் கடவுள் தியானத்துடனும் நாம் வாழ்ந்து உலகில் அமைதியை நிலை நாட்ட வேண்டும். நாமனைவரும் ஒரு தாய் பிள்ளைகளாக இருக்க நினைப்பதேயன்றி சாத மத பேதம் காட்டி வாழும் அஞ்ஞானத்தை ஒழிக்க வேண்டும். இவைதான் சுவாமி சிவானந்தர் உலகத்தவர்களுக்கு என்றும் போதித்து வரும் சற்போதனையாகும். இவற்றை நாம் பின்பற்றுவதால நம் வாழ்வு மலர்ச்சியடையும்".

---

## தொழில் மந்திரி...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

டி. எஸ் துரைராஜா உட்பட யாழ்ப்பாண மாநகரசபை அங்கத்தவர்களான திருவாளர்கள் எம். ஜேக்கப், பி. எம். யோன்' ஏ. நடராஜா, ஏ. துரைராஜசிங்கம், என். தேவபாலசுந்தரம், எஸ. ராஜரத்தினம், காதி எம். எம். சுல்தான், ஜே. எதுஅழகையா ஆகியோரும் கலந்ஸ் கொண்டனர்.

வடபகுதி இ. போ. ச. அபிவிருத்திபற்றிஆராயவே மந்திரி இங்கு வந்ததாக அறியப்படுகிறது. மந்திரி நேற்று நண்பகல் யாழ்ப்பாணம் மாநகரசபைக்கு விஜயும் செய்து புதிய பஸ் நிலையம் பற்றி விவாதித்ததாகவும் தெரிகிறது.

மந்திரி இன்று விமானத்தில் கொழும்பு செல்வார்.

---

## ஐயாறன்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

தரிசிப்பது குறிப்பிடத்தக்கதென்ருர். அடுத்த வருடத்துக்கு இதில் கூடுமானயோசனைகளைப் பின்பற்றலாம்.

* * *

இங்கு ஒரிடத்தில் நடந்த பாரதியார் விழாவுக்குச் சென்றிருந்தேன். பேச்சுக்கள்முடிந்த பின் பாட்டும், நாடகமும் சினிமா முதலிய வேறுபாட்டுக்களே பாடினர். பாரதியார் விழாவில் பாரதிபாட்டுக்கள் பாடுவதேமுறை. அதுவே அவருக்கும் மகிழ்ச்சியளித்து மக்களுக்கும் பலனளிக்கும் விழாவையும் சிறப்பிப்பதாகும்

---

# சோவியத்-மேற்கத்திய.......

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அதைப்பற்றி நான் ஒன்றும் சொல்வதற்கில்லை. ஆனல் மாஸ்கோவில் உலக நெருக்கடி பற்றி பதட்டம் எதுவும் இல்லை என்பது எனது சொந்த அபிப்பிராயம்" என்ருர்.

### அமெரிக்க விஜயம்

மாஸ்கோவுக்குச் சென்று வந்துள்ளதால் அமெரிக்க விஜயம் திட்டமிட்டதற்கு முன்னல் வைத்துக்கொள்ளநேருமா? என்று ஒரு நிருபர் கேட்டதற்கு ஸ்ரீ நேரு பதிலளிக்கையில் அமெரிக்கா செல்லும் திட்டத்தை முன்னடியே வைத்துக் கொள்ளவேண்டிய அவசியமில்லை யென்ருர்

அமெரிக்காவுக்குச் செல்லும் பொழுது தாம் ஐ. நா. சபைக் கூட்டத்திலும் ஒருநாள் கலந்து கொள்ளக்கூடுமென்றும் பிரதமர் தெரிவித்தார்.

### அற்புதத்தை எதிர்பார்க்க முடியாது

பெல்கிரேட், மகாநாடு பற்றிய கேள்விக்குப் பதிலளிக்கையில் மகாநாடு வெற்றிகரமாக முடிந்ததென்றும் ஆனல் அற்புதமான பலனெதையும் எதிர்பார்க்க முடியாதென்றும் கூறுனர்.

### 3-வது மண்டலம் மாருனது

"நடுநிலைமை நாடுகளைக் கொண்ட மூன்ருவது மண்டலம் அமைக்கவேண்டுமென்று பெல்கிரேட் மகாநாட்டில் நீங்கள் கூறியதாக சீனப்பத்திரிகை யொன்றில் செய்தி வெளி வந்திருக்கிறது" என்று ஒரு நிருபர் குறிப்பிட்டதற்கு ஸ்ரீ நேரு பதிலளிக்கையில் "மண்டலங்கள் அமைப்பதையும் இருப்பதையும் நான் எப்பொழுதுமே எதிர்த்து வந்திருக்கிறேன். மூன்ருவது மண்டலம் அமைக்கவேண்டுமென்று நான் கூறியதாகச் சொல்லப்படுவது உண்மைக்கு மாருனது. உண்மையில் அந்த மகாநாட்டில் மண்டல அமைப்பு பற்றி யாருமே குறிப்பிடவில்லை" என்ருர்.

பஞ்சாபி சுபா பிரச்னையை முன்னள் பஞ்சாப் கவர்னர் ஒருவரின் மத்தியஸ்தத்துக்கு விடவேண்டுமென்று மாஸ்டர் தாராசிங் கூறியிருப்பதுபற்றி ஸ்ரீ நேருவிடம் ஒரு நிருபர் கேட்டபொழுது "பாரத அரசாங்க விஷயங்களை வெளியார் ஒருவரின் மத்தியஸ்தத்துக்கு எப்படி விட முடியும்?" என்று கேட்டார்.

## புதியவரிகளுக்கு மாநகரசபைகண்டனம்

காலி, திங்கள்

காலி மாநகரசபையின் விசேஷ பொதுக் கூட்டத்தில் தொழிலாளர் மீது சுமத்தப்பட்டிருக்கும் புதிய வரிகளை அரசாங்கம் உடனடியாக வாபஸ் பெறவேண்டும் என அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்ளும் தீர்மானம் நிறைவேறியது. திரு. டபிள்யூ. டி. ஒபயசேகரா மட்டுமே இதனை எதிர்த்துப் பேசினர்.

சீனி, மாவு போன்ற அத்தியாவசியமான உணவுப் பொருள்கள்மீது, விதிக்கப்பட்டுள்ள விலையில் 5 சதம் குறைக்கவேண்டுமென்ற மற்றுமொரு தீர்மானமும் இக்கூட்டத்தில் நிறைவேறியது. இதற்கும் திரு. டபிள்யூ. டி. ஒபயசேகரா பாதகமாக வாக்களித்தார்.

இத்தீர்மானத்தை ஆமோதித்த திரு. டபிள்யு. டி. எஸ். அபயகுணவர்த்தன பேசுகையில், வாழ்க்கைச்செலவு உயர்ந்துள்ளதால், இந்நாட்டிலுள்ள மக்கள் பெரும் கஷ்டம் அனுபவிக்கிறார்கள் என்றார்.

அண்மையில் தாம் கண்டிக்கு விஜயம் செய்ததாகவும் தாம் புறப்பட்டுச் செல்லும்வழியில், காலைத் தேநீரைப்பருகுவதற்காக சுமார் 20 கடைகளுக்கு ஏறி இறங்கியதாகவும் அக்கடைகளில் ஒன்றிலாவது பணிஸோ அன்றி அப்பமோ இருக்கவில்லை என்றும் அவர் கூறினர்.

# சமயத் தொண்டர்களுக்கு விஸா வரி

## விலக்களிக்க கோரிக்கை

ஜாஎலை, ஞாயிறு

இலங்கையில் தொழில் செய்வதற்காக வந்த கள்ளிறக்கும் தொழிலாளர்களுக்கு விசா வரியிலிருந்து விலக்களிக்க முடியுமானல் ஊதியம் எதுவுமில்லாமல் தர்ம ஸ்தாபனங்களை நடத்தும் கன்னியாஸ்திரிகளுக்கும் பாதிரிமார்களுக்கும் விசாவரி கட்ட வேண்டுமென்று கேட்பது ஏன் என்பது விளங்கவில்லை" என்று திரு. பிலிப் பெரேரா ஜாஎலை நகரசபையின் மாதாந்தக் கூட்டத்தில், வெளிநாட்டு சமயத் தொண்டர்களுக்கு விசா வரியிலிருந்து விலக்களிக்க வேண்டுமெனக் கோரும் ஒரு பிரேரணையைக் கொண்டு வந்து பேசுகையில் கூறினர்.

கன்னியாஸ்திரிகள் பலர் தங்களின் ஜீவனத்துக்காக மட்டுமல்ல அனதை விடுதிகளையும் வயோதிப இல்லங்களையும் நடத்துவதற்காகவும் வீட்டுக்கு வீடு கையேந்தித் திரியவேண்டியுள்ளது. கையேந்துபவர்களிடமே கையேந்துவது அரசாங்கத்துக்கு அவமானமில்லையா? என்று திரு. பிலிப் பெரேரா கேட்டார்.

இப் பிரேரணையை ஆமோதித்த திரு. அலோஸ்வாஸ் பேசுகையில் கள்ளிறக்குவோருக்கு விசா வரியில் விலக்களித்துவிட்டு சமயத் தொண்டர்களுக்கு விசா வரி விதித்தது அரசாங்கத்தின் பிரதம ஆலோசகர்களான கம்யூனிஸ்ட்டுகளின் தூண்டுதல் தான் காரணமென்றார்.

## ஆசிரிய பயிற்சியும் பிக்குகளும்

கொழும்பு, திங்கள்

ஆசிரிய பயிற்சிக் கல்லூரிகளில் பயில்வதற்கான புகுமுகப் பரீட்சையில் தேர்வு பெற்ற பௌத்த பிக்குகளுக்கு அக் கல்லூரிகளில் பயில இடமளிப்பது பற்றி கல்வி இலாகா இன்னும் தீர்மானிக்கவில்லை.

குருமார்கள் அரசாங்க சேவையில் சேர அனுமதியளிக்கக் கூடாது என அரசாங்கம் தீர்மானித்ததைத் தொடர்ந்தே இவ்வித நிலை ஏற்பட்டுள்ளது.

இதுபற்றி கல்வி மந்திரியின் தீர்ப்பைக் காத்திருப்பதாக சம்பந்தப்பட்ட இலாகா அதிகாரி ஒருவர் தெரிவித்தார்

பௌத்த குருமார்கள் இப் பரீட்சைகளில் சித்தியடைந்தும் ஆசிரியர்களாக கடமையாற்ற முடியாதிருந்தால் புகுமுகப் பரீட்சை விதிகளில் திருத்தம் செய்யப்படவேண்டுமென மேலும் அவர் தெரிவித்தார்.

பரீட்சையில் சித்தி பெற்ற பௌத்த பிக்குகளுக்கு ஆசிரியர் உத்தியோகம் வழங்காத பட்சத்தில் அரசாங்கம் ஒவ்வொரு பௌத்த பிக்குவையும் பயிற்றுவித்த செலவாக தலைக்கு 1000 ருபாவை இழக்க வேண்டி நேரிடும்.

## விவசாய விருத்தியில் மந்திரியின் ஆர்வம்

கொழும்பு, திங்கள்

அரசாங்கத்தின் புதிய நிதி வருடத் திட்டத்தின் பிரகாரம் அதிக உணவு பயிரிடுவதைத் துரிதப்படுத்துமாறு காணி விவசாய நீர்ப்பாசன மந்திரி திரு. சி. பி. டி' சில்வா தமது அமைச்சின் கீழுள்ள இலாகாக்களின் தலைவர்களுக்கு அறிவித்துள்ளார்.

நடப்பு வருடத்துக்காக ரூ. 199 கோடியே 60 லட்சம் இந்த அபிவிருத்தி வேலைக்கென ஒதுக்கப்பட்டுள்ளது.

அரிசி, மிளகாய், வெங்காயம், உருளைக்கிழங்கு, கோப்பி, சீனி ஆகிய உணவுப் பொருள்களின் உற்பத்திப் பெருக்கத்துக்கே முதலிடம் வழங்கப்படும். பருத்தி உற்பத்தி செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப் படுமெனத் தெரிகிறது.

விவசாய உற்பத்திப் பெருக்கத்துக்கு வழி செய்யும் பொருட்டு விவசாயத்துறையில் ஈடுபட்டு உழைப்பவர்களுக்கு இயந்திர சாதனங்கள் மூலம் உதவியளிக்குவிக்குமாறு இலாகா தலைவர்களுக்குமந்திரி தெரிவித்துள்ளார்.

ஐக்கிய அமெரிக்காவிடமிருந்து மைலோ, சோயா, எள்ளு விதைகளைப் பெறுவதற்கான ஒழுங்குகளை மந்திரி செய்துள்ளார். இந்த விதைகளை உள்ளூரில் அதிகமாகப் பயிரிடுவதறகான நடவடிக்கையும் எடுக்கப்பட்டுவருகிறது.

# "சிவானந்தரின் கருத்துக்கள் சமாதானத்துக்கு வழிகாட்டும்"

## நாவலப்பிட்டியில் ஜயந்தி விழா

நாவலப்பிட்டி, ஞாயிறு

"சுவாமி சிவானந்த சரஸ்வதி அவர்கள், இப்பொழுது உலகிலேயுள்ள மதங்களுக்கு போட்டியாக இன்னுமொரு புதிய சமயத்தை உண்டு பண்ணி அதனை மக்கள் மனதிலே புகுத்துவதற்கு முயற்சி செய்யவில்லை. ஆனல் அவர் உலகிலே இன்று நிலவும் எல்லா சமயங்களினதும் அடிப்படைத் தத்துவங்களும் ஒரு இலட்சியத்தையே குறிக்கோளாகக் கொண்டியங்குகின்றன என்பதை விளங்கவைக்கும் சர்வசமய சாரத்தின் உருவகமாகவே தமது கருத்துக்களைப் பரப்பித் தொண்டாற்றி வருகிறார். அவர் ஒரு உலக ஆத்மீகத் தலைவர்.

இவ்வாறு திரு. சு. பிரேமசம்பு நாவலப்பிட்டி சிவானந்த விடுதியில் நடைபெற்ற சுவாமி சிவானந்த சரஸ்வதி அவர்களின் 75-வது ஜயந்தி தின விழாக் கொண்டாட்டத்தில் பேசும்போது கூறினர். அவர் மேலும் கூறியதாவது:-

உலகிலே் நிரந்தரமான சமாதானமும் சகவாழ்வும் நிலை பெறுவதற்கு சுவாமி சிவானந்தாவின் உபதேசங்கள் பேருதவி புரிகின்றன. அவரது கருத்துக்களை உலகத்திலேயுள்ள வல்லரசுகளும் மற்றும் நாடுகளும் ஏற்றுக்கொள்ளுமேயானல் உலகத்தில் யுத்த பயம் இருக்காது; ராணுவ ஒப்பந்தங்கள் தேவையில்லை, ஆயுதங்களைச் செய்வதற்கு அதிக பணம் செலவழிக்க வேண்டியதில்லை. அழிவுத் துறையில் செலவிடப்படும் நேரத்தையும் சக்தியையும் ஆக்கத்துறையில் சமாதானப் பணி செய்வதற்கு உபயோகப் படுத்த முடியும். சுவாமி சிவானந்தாவின் கருத்துக்கள் கிதிலுறும் உலகிற்கு ஈடேற்றம் தரக்கூடியவை.

## அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கொழும்புக் கிளை

கொழும்பு, திங்கள்

அகில இலங்கை தமிழ் காங்கிரசின் கொழும்பு ஆதரவாளர்கள் கொள்ளுப்பிட்டியிலுள்ள கட்சி அலுவலகத்திடிகூடி கொழும்புக்கிளையை அங்குரார்ப்பணஞ்செய்து வைத்தனர். பிரபல நியாயதுரந்தரரான திரு. சு. சரவணமுத்து தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்திற்கு பல தரப்பட்ட தமிழ் மக்கள் பெருந்திரளில் வந்திருந்தனர். கூட்டத்தில் இன்றைய அரசியல் நிலைபற்றி பலர் உரை நிகழ்த்தினர். பின்னர் கிளையின் புத்தாண்டு நிருவாகிகள் தெரிவுசெய்யப்பட்டனர்.

நடுவர் திரு. சு.சரவணமுத்து துணைநடுவர்கள்: திருவாளர்கள் கே. இராசதுரை, செ. அழகரத்தினம், வி. பி. என். சிங்கம், இ. பி. செல்லையா. கௌரவ பொதுச்செயலாளர்: திரு. பி. யே. அலோசியஸ். கௌரவ பொருளாளர்: திரு ஆர். தெய்வேந்திரம். கௌரவ துணைச்செயலாளரும் பொருளாளரும்: திரு. கே. கே. கனகராசா. செயற் குழு: திருவாளர்கள் கே. நாகரத்தினம், ஆர். ஆர். நல்லையா, சி.வாமதேவன், ஆர். லோகநாதன், சூசைப்பிள்ளை, ஆர். என். எஸ். ஸ்ரீதரன், என். குமாரசுவாமி, எ. அருள்துரை. வி. இ.செல்வநாயகம், எஸ். இராசலிங்கம்.'

## குளிக்கச் சென்றவர் ஆற்றில் மரணமானர்

களனி, திங்கள்

தனது சகோதரன் களனி ஆற்றில் ஆபத்தான நிலையில் இருந்தபொழுது, தாம் எவ்வாறு உதவிகோரிக் கத்தினர் என்பதை திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. டி. வை. நந்துணு முன்னிலையில் வேலந்தன் கமலா எடுத்துக்கூறினர்.

விசாரணையின்போது கமலா கூறியதாவது:

"குளிப்பதற்காக நானும் எனது சகோதரன் டேவிட்டும் களனி ஆற்றுக்குச் சென்றோம். நான் உடுப்புகள் துவைத்துக் கொண்டிருக்கையில், டேவிட் குளிப்பதற்காகத் தண்ணீரில் குதித்தார். ஒரு சில நிமிடங்களுக்குப்பின்னர், டேவிட் மிகவும் ஆபத்தான நிலையில் இருக்கக் காணப்பட்டார். அதைக் கண்ட நான் 'ஐயோ...... ஐயோ... என் சகோதரனை ஆபத்திலிருந்தும் காப்பாற்றுங்கள்...' என்று கத்தினேன். ஆனல் இது பலனளிக்கவில்லை."

மரணவிசாரணை நடத்திய திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. டி. வை. நந்துணு விபத்தின் விளைவாக மரணமானர் எனத் தீர்ப்பளித்தார்.

## ஆபாச நூல்களின் பட்டியல்

### கலாசார டைரக்டர் கேட்கிறர்

கொழும்பு, திங்கள்

இலங்கையில் இறக்குமதி செய்யப்படும் ஆபாசப் புத்தகங்களின் விபரப் பட்டியல் ஒன்றை தமக்கு சமர்பிக்கும்படி இலங்கை எழுத்தாளர் சங்கத்தை கலாசார விவகார டைரக்டர் திரு. எம். ஜே. பெரேரா கேட்டுள்ளார்.

ஆபாச இலக்கியங்கள் பற்றிய தங்கள் கருத்தைத் தெரிவிக்குமுகமாக எழுத்தாளர் சங்கத் தூதுகோஷ்டியொன்று திரு. பெரேராவை சமீபத்தில் சந்தித்து ஆபாச இலக்கியங்கள்மீது நடவடிக்கை எதுவும் எடுப்பதற்கு முன்னர் இலக்கிய தரமில்லாத சகல நூல்களையும் தடைசெய்யவேண்டுமென்று தூதுகோஷ்டி கேட்டுக் கொண்டது.

ஆபாச நூல்கள் விற்பனையைக் கட்டுப்படுத்தும் நோக்கத்துடன் பொலிஸ், கல்வி அதிகாரிகளையும் கலாசார இலாக்கா அதிகாரிகளையும் கொண்ட ஒரு மகாநாட்டைத் தாம் விரைவில் கூட்டப்போவதாக திரு. பெரேரா தூதுகோஷ்டியிடம் தெரிவித்தார்.

## மக்கள் வங்கி ரூ. 1 கோடி கடனுதவி

கொழும்பு, திங்கள்

இதுவரை மக்கள் வங்கி விவசாயிகளுக்கு ஒரு கோடி ருபா கடனை வழங்கியுள்ளது. இம் மாதம் இன்னும் ரு. 30 லட்சம் இவ்விதம் வழங்க உத்தேசித்துள்ளது.

கூட்டுறவு சங்கங்கள், மாவட்ட கூட்டுறவு வங்கிகள் மூலமாகவே இந்த கடன் வழங்கப்பட்டுள்ளது.

இப்போது, நெல் உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கே கடன் உதவி வழங்குவதில் முதலிடம் அளிக்கப்படுகின்றது.


ஓர் அரிய சந்தர்ப்பம்!

கார் ஓட்டுவதற்குப் பழகுங்கள். இருபதே நாட்களில் நீங்கள் கார் ஓட்டுவதற்குப் படித்து 'லைசன்ஸ்' எடுக்கவேண்டுமானல் இன்றே எம்மிடம் வாருங்கள்.

நம்பிக்கைக்கும் நாணயத்திற்கும் பெயர்பெற்ற ஸ்தாபனம்

ராஜா டிறைவிங் ஸ்கூல்

132, பேராதனிய ரோட், கண்டி.

மேல் பகுதியில் உள்ளவர்களுக்கு

ஆம்ஸ் ஹோட்டல் பில்டிங்

மல்லியப்பூ, ஹட்டன்.



10,000,000 மக்களும் விரும்பி வாங்குவன!
இலங்கை முழுவதும் புகழ் பரப்புவன!
எவை?

டொலர்

ALUMINIUM INDUSTRIES (CEYLON) LTD.
DOLLAR BRAND

பவுண் அடையாளம் உள்ள அலுமினியப் பாத்திரங்களே ! ஏன்?

டொலர் அலுமினியம் மாற்று உயர்ந்தது சுத்தம் உள்ளது!

டொலர் அலுமினியம் அழகு அமைப்பு கண்கவர்ச்சி உள்ளது!!

டொலர் அலுமினியம் உறுதி உழைப்பு உத்தரவாதம் உள்ளது!!!

எல்லாவற்றிற்கும் மேல்

உங்கள் தாய்ப் பொன்னுட்டில் மாவிட்டபுரத்தில் நவீன முறையில் செய்யப்படுவது !

டொலர் பவுணை பார்த்து வாங்குங்கள் எங்கும் கிடைக்கும்

டொலர் மாத்திரமே உத்தரவாதமானது!

தயாரிக்குமிடம்:

அலுமினியம் இன்டஸ்றீஸ் லிமி.,

மாவிட்டபுரம். யாழ்ப்பாணம்.

J. D. 3

## காருக்குள்ளே மரணமானுர்

மாத்தளை, திங்கள்

மாத்தளையை நோக்கி வாடகைக் கார் ஒன்றில் சென்று கொண்டிருந்த அன்னமடுவையைச் சேர்ந்த அரசாங்க நில அளவையாளர் திரு. ஜோர்ஜ் பெர்ணண்டோ (வயது 25) நச்சுத் திராவகம் உட்கொண்டு காருக்குள்ளே மரணமானுர்.

விசாரணையின்போது தெரிவிக்கப்பட்டதாவது:- அன்னமடுவையிலிருந்து மாத்தளைக்கு திரு. பெர்ணண்டோ வாடகைக் காரொன்றில் புறப்பட்டுச் சென்ருர். காரில் அவர் பிரயாணம் செய்தபோது கவலையில்லாதவரைப்போல்தான் காணப்பட்டார். சிறிது தூரம் சென்றதும் திரு. பெர்ணண்டோ திடீரென ஒரு கடிதத்தைக் கார்ச் சாரதியிடம் கொடுத்து அதை மாத்தளையிலிருக்கும் தனது தாயாரிடம் ஒப்படைக்குமபடியும் கூறினுர். அதற்குப் பிற்பாடு நச்சுத் திராவகத்தை உட்கொண்டார். இதைத் தொடர்ந்து உடனடியாகவே அவர் மரணமானுர்.

தனது தாயாருக்கு திரு. பெர்ணண்டோ சிங்களத்தில் எழுதிய கடிதத்தில் "அடுத்த நாள் அங்கு குழப்பம். இன்றும் குழப்பம். எந்த நாளும் குழப்பமாகவேதான் இருக்கும். இதன் காரணத்தால் நான் விடை பெற்றுச் செல்கிறேன்" என்று கூறப்பட்டுள்ளது.

விசாரணை நடத்திய திடீர் மரண விசாரணை அதிகாரி தற்கொலையெனத் தீர்ப்பளித்தார்.

## இளைப்பாறிய அதிபருக்கு பாராட்டு விழா

யாழ்ப்பாணம், திங்கள்

பருத்தித்துறை ஆங்கிலப் பாடசாலை அதிபராகவிருந்து இளைப்பாறிய நூலாசிரியர் திரு. த. இராமநாதபிள்ளைக்கு இம்மாதம் 17ம் திகதி ஞாயிற்றுககிழமை காலை புலோலி ஆண்கள் ஆங்கில பாடசாலையில் ஓர் பாராட்டு விழா நடைபெறும்.

பருத்தித்துறை மாவட்ட நீதிபதி திரு. என். சிவஞானசுந்தரம் தலைமையில் முற்பகல் நடைபெறும் விழா நிகழ்ச்சிகளில் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, திரு. கே. சிவப்பிரகாசம், திரு. என். எஸ். சேதுகாவலர் ஆகியோர் சொற்பொழிவாற்றுகின்றனர்.

கலாநிதி திரு. கே. சிவப்பிரகாசம் தலைமையில் நடைபெறும் பிற்பகல் நிகழ்ச்சிகளில் கலாநிதி கே. கணபதிப்பிள்ளை, வித்துவான் கே. கிருஷ்ணபிள்ளை ஆகியோர் சொற்பாழிவாற்றுகின்றனர்.

நண்பகலில் விருந்துபசார ஒன்றும் நடைபெறவிருக்கிறது

## உதை பந்தாட்டம்

காங்கேசன் துறை. திங்கள்

மாவிட்டபுரம் அலுமினியத் தொழிற்சாலையைச் சேர்ந்த தொழிலாளர் கோஷ்டிக்கும் கருகம்பானை உதைபந்தாட்டக் கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற உதை பந்தாட்டப் போட்டியில் இரு கோஷ்டிகளும் தலா ஒவ்வொரு கோல் போட்டமையால் ஆட்டம் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது. போட்டிக்கு கே. கிருஷ்ணலிங்கம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினுர்.

## மொரார்ஜி அமெரிக்கா செல்வார்

பம்பாய், செப். 11

கானு குடியரசின் தலைநகரான அக்ராவில் நடைபெறவிருக்கும் காமன்வெல்த் நிதி மந்திரிகளின் மகாநாட்டில் கலந்துகொள்வதற்காக பாரத நிதிமந்திரி திரு. மொரார்ஜி தேசாய் நேற்று அக்ராவுக்கு பிரயாணமானுர்.

இதன் பின் வியன்னவில் நடைபெறவிருக்கும் சர்வதேச நிதி ஸ்தாபன மகாநாட்டிலும் திரு. தேசாய் கலந்துவிட்டு அமெரிக்காவுக்கும் விஜயம் செய்தபின் தாயகம் திரும்புவார்.

# விளையாட்டுத்துறையில் 6 புதிய உலக சாதனைகள்

கடந்த ஆறுவாரகாலத்தில் விளையாட்டுத் துறையில் ஆறு புதிய உலக சாதனைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

17-7-61 ஹல்பேர்க், மகீ, பிலிப்பொற், சினெல் ஆகியோரைக் கொண்ட நியூசிலாந்து விளையாட்டுக் கோஷ்டி 4×1 மைல் அஞ்சலோட்டத்தை 16 நிமிஷம் 23·8 விநாடிகளில் ஓடி ஒரு புதிய உலக சாதனையை ஏற்படுத்தினர். பழைய உலக சாதனை 29-9-59ல் ஹங்கேரிய கோஷ்டியால் ஏற்படுத்தப்பட்ட 16 நிமிஷம் 25·2 விநாடிகளாகும்.

நியூசிலாந்தைச் சேர்ந்தவரும் ஒலிம்பிக் விளையாட்டுகளில் தங்கப் பதக்கம் பெற்றவரும் 7-7-61ல் இரண்டுமைல் ஓட்டத்தில் புதிய உலக சாதனை ஏற்படுத்தியவருமான மறே ஹல்பேர்க் 24-7-61ல் மூன்று மைல் தூரத்தை 13 நிமிடம் 10 விநாடிகளில் ஓடி ஒரு புதிய உலக சாதனையை நிலை நாட்டினுர். 9-7-58ல் அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த அல்பேர்ட் தொமஸ் ஏற்படுத்திய சாதனையை 4/5 விநாடிகளால் இவர் முறியடித்துள்ளார்.

ருஷ்யாவைச் சேர்ந்த விளையாட்டு வீரராகிய வலறி பூறுமெல் 31-8-61ல் உயரம் பாய்தல் நிகழ்ச்சியில் 7 அடி 4 1/2 அங்குலத்தைத் தாண்டி தமது உலக சாதனையை 1/2 அங்குலத்தால் முறியடித்தார்.

ஐக்கிய அமெரிக்காவைச் சேர்ந்த ஜே. சில்வெஸ்ரர் (Jay Syevester) 11-8-61ல் பரிதி வட்டம் வீசும் நிகழ்ச்சியில் 198 அடி 8 1/4 அங்குல தூரம் எறிந்து ஒரு புதிய உலக சாதனையை ஏற்படுத்திஞர். ஒன்பது நாட்களுக்குப் பின் 20-8-61ல் பரிதி வட்டத்தை 199 அடி 2 1/2 அங்குல தூரம் எறிந்த தமது சாதனையை முறியடித்திருக்கிருர்.

### பெண்களின் சாதனைகள்

ருஷ்யாவைச் சேர்ந்த தாமரா பிரெஸ் என்ற வீரரமணி பரிதி வட்டத்தை 1-9-61ல் 190 அடி 5 1/4 அங்குல தூரம் எறிந்து தாம் ஏற்படுத்தியிருந்த உலக சாதனையை ஏறக்குறைய ஒரு அடியினல் முறியடித்தார்.

நீளம் பாய்தல் நிகழ்ச்சியில் ருஷ்யாவைச் சேர்ந்த தட்டியானு ஷெல்கனேவா என்ற வீரரமணி 2-9-61ல் 21 அடி 3 1/2 அங்குலத்தைப் பாய்ந்து தமது உலக சாதனையை 1/2 அங்குலத்தினுல் முறியடித்தார். இவர் பாய்ந்த போது காற்றின் வேகம் மிதமிஞ்சி இருந்தமையால் இந்த சாதனை உலக சாதனையாக ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது எனத் தெரியவருகிறது.

## வானெலி நிகழ்ச்சிகள்

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

**செவ்வாய் 12-9-61**

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமிய நிகழ்ச்சி, 7-15 தேர்ந்த இசை, 7-30 திரைஇசை, 8-00 வயலின், 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகர்னம், 1-00 கதம்பஇசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 வளரும் பயிர், 5-45 திரைஇசை, 6-15 கிராமசஞ்சிகை, 6-45 புல்லாங்குழல்.

இரவு 7-00 பாட்டு. 7-30 நேயர்விருப்பம், 8-00 இஸ்லாமியநிகழ்ச்சி, 9-15 பாரதியார் விசேஷ நிகழ்ச்சி, 10-00 நாகஸ்வரம்.

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2, இரவு 7-15.

காலை 6-45 மங்களஇசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 வாத்தியஇசை, 7-10 நிகழ்ச்சிக் குறிப்புகள், 7-30 மங்கை நல்லூர் டி. வி. குஞ்சிதபாதம் - பாட்டு.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 12-30 நடுத்தரப்பள்ளிகளுக்கு, 1-00 கதம்பம், 1-50 வாத்தியஇசை, 2-10 உயர்தரப்பள்ளிகளுக்கு.

மாலை 4-45 விள்தபாரதி (கர்நாடகசங்கீதம்), 5-45 இசைப் பயிற்சி, 6-15 கிராம நிகழ்ச்சிகள்.

இரவு 7-30 கிராமத்தில் புதுயுகம் - பேச்சு, 7-45 பி. லீலா - பாட்டு, 9-15 சென்னை அஞ்சல், 9-30 மெல்லிசை, 10-00 பாரதிவிழா - ரேடியோ வர்ணனை.

## கள்ளுத் தவறணை

புசல்லாவ, ஞாயிறு

புசல்லாவைக் கடை வீதியில் உள்ள கள்ளுத் தவறணை இம்முறை ஒரு லட்சத்து எண்பத்தி ஆருயிரம் ரூபாய்க்கு ஏலத்தில் விடப்பட்டிருக்கிறது. சாராயத் தவறணையும் பெருவாரியான தொகைக்கு ஏலத்தில் விடப்பட்டிருக்கிறது.

## டிகோல் கொலை முயற்சி

### மேலும் பலர் கைது

பாரிஸ், செப். 11

பிரஞ்சு ஜனதிபதி ஜெனரல் டிகோலை கொலைசெய்ய சென்ற வெள்ளிக்கிழமை நடைபெற்ற முயற்சியைத் தொடர்ந்து மேலும் பலர் இப்பொழுது கைது செய்யப்பட்டுள்ளனர். ஜெனரல் டிகோலின் அல்ஜீரிய கொள்கையை எதிர்க்கும் தீவிரவாதிகளின் ஓ. ஏ. எஸ். என்ற ஸ்தாபனத்தின் சதித் திட்டத்தின் விளைவாகவே இக் கொலை முயற்சி நடைபெற்றதாக அறிவிக்கப்பட்டது.

## ஆவரங்கால் லொறி விபத்து வழக்கு

### எதிரி விடுதலை

காங்கேசன் துறை, திங்கள்

அச்சுவேலியைச் சேர்ந்த சவுரிமுத்து இராஜேந்திரா என்பவரை ஆவரங்கால் சந்தியில் வைத்து லொறியினல் மோதி அவருக்கு மரணம் விளைவித்ததாக யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பவலோஸ் சாக்கோ என்பவர் மேல் குற்றஞ்சாட்டி காங்கேசன் துறைப் பொலிசாரால் மல்லாகம் நீதிபதி திரு. டபிள்யூ. டி. தாமோதரம் முன்னிலையில் தொடரப்பட்ட வழக்கில் முதலாவது சாட்சியத்தைப் பதிவு செய்தபின நீதிபதி எதிரியை விடுதலை செய்தார்.

ஆவரங்காலைச் சேர்ந்த வேலன் சாட்சியமளிக்கையில் முதலில் தான் இச்சம்பவத்தைக் கண்ணல் கண்டதாகக் கூறினுர். பின்னர் எதிரிதரப்பு வழக்கறிஞரால் குறுக்கு விசாரணை செய்யப்பட்டபோது வேலன் சின்னவன் பின்வருமாறு கூறினுர். "நான் இச்சம்பவத்தை கண்ணல் காணவில்லை. நான் ஆவரங்கால் சந்திக்குச் சமீபத்தில் சைக்கிளில் வரும்போது ஏதோ சத்தம்கேட்டது. சம்பவம் நடந்த இடத்துக்கு நான் சென்று பார்க்கையில் அங்கு காலஞ்சென்றவர் லொறிக்குக் கீழ் கிடந்ததைக் கண்டேன்.

நீதிபதி எதிரியை விடுதலை செய்தார்.

திரு. ஏ. கதிரவேலு எதிரிதரப்பில் ஆஜரானர் காங்கேசன் துறை பொலிஸ் உதவி இன்ஸ்பெக்டர் திரு. ஜி. ஏ. பி. சில்வா இவ் வழக்கைத் தாக்கல் செய்திருந்தார்.





# கிஸ்ஸெல் சாரி பேப்பிரிக்

உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் இப்புதிய சாரி பேப்டரிக்கின் அற்புதமான அழகொளியின் நிறங்களிலே முத்தின் மோகனப் பகட்டு துலங்குவதைக் காணலாம். நன்கு கழுவிப் பாவிக்கக் கூடியது. கசங்காது. சுருங்காது.

பங்காத நிறமும் எடுப்பான டிசைனும் அணிபவரின் அழகுக்கு அழகூட்டுகிறது. எழிலான பல அழகிய அச்சடி மோஸ்தரிலும், நிறங்களிலும் கிஸ்ஸெல் சாரி பேப்பிரிக்கைப் பெற்றுக்கொள்ளலாம்.

ஏகவிநியோகஸ்தர்கள்: சி. டபிள்யூ. ஈ. கடைக்குமிட்டர.

சி. டபிள்யூ. ஈ. இலாக்கா ஸ்டோர். கோட்டை, கொழும்பு.

" மெக்கலம் ரோட்,

" மெயின் வீதி புறக்கோட்டை;

" மருதானை மற்றும் வெளியூர்

கிஸ்ஸெல் சாரி பேப்பிரிக்-சிறந்த வாழ்வுக்கு சி: டபிள்யூ. ஈ. அறபணிக்கும் ஒன்றுகும்.

நினைவிருக்கட்டும். இப்பொழுதும், எப்பொழுதும் உங்களுக்கு சி: டபிள்யூ. ஈ. உயர்ந்த ரக பொருட்களைத் தருகிறது.

CWE

TX/224

# தலைமன்னார் தடுப்புக்காவல் முகாமில் இருவர் மரணம்

## சுகாதாரச் சீர்கேட்டால் ஏற்பட்டுள்ள நிலை

மன்னார், ஞாயிறு

தலைமன்னாரில் உள்ள தடுப்புக்காவல் முகாமில் குடலோடு சம்பந்தப்பட்ட வயிற்றுளைவு, வயிற்றோட்டம், முதலிய வியாதிகள் சடந்த சில வாரங்களாகப் பரவத் தொடங்கிவிட்டன. 150 பேர் வைக்கக்கூடிய வசதியுள்ள இந்த முகாமில் இப்போது 400 பேர் வைக்கப்பட்டுள்ளனர். 50 பேர் நோய்வாய்ப்பட்டுள்ளதாகவும் அவர்களில் இருவர் வயிற்று நோயால் மரணமடைந்ததாகவும் அறியப்படுகிறது.

அவ்விடத்தைத் துப்புரவு செய்வதற்குத் தொழிலாளர்களில்லாக் குறையால் சுகாதாரம் சீர்கேடடைந்துள்ளதாகத் தெரிகிறது. மலசலகூட வசதி கூட மோசமாக இருக்கிறதாம்.

பாதிப்பேர் இங்கு ஆறு மாதத்துக்கு அதிகமாகவும் 20 பேர் ஒருவருடத்துக்கு மேற்பட்ட காலமாகவும் இருக்கிறார்கள்.

இலங்கை அரசாங்கம் இவர்கள் கள்ளக்குடியேற்றக்காரர் எனக் காட்டி இவர்களை அனுப்புவதற்குரிய முறைகளைத் தேடிக் கொண்டிருக்கிறது. இந்திய அரசாங்கம் அது உண்மையென்று ஒப்புக்கொள்ளக்கூடிய நிலையிலில்லாமல் அவர்களை விடுவிக்கும்படி கேட்டிருக்கிறது.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கிளைக் காரியதரிசி திரு. எஸ். ஆர். எம். வேலுசாமி இவ்விஷயத்தில் நடவடிக்கை எடுத்துவருகிறார்.

---

கொழும்பு, திங்கள்

பதுளை பலநோக்கு கூட்டுறவுச் சங்கம், கட்டுப்பாட்டு விலையை மீறி சில உணவுப் பொருட்களை விற்பனை செய்ததாக புகார்செய்யப்பட்டதைத் தொடர்ந்து பதுளை உணவு உதவி கமிஷனர் விசாரணை நடத்துகிறார்.


சுகாதாரத்திற்கு சுவையான ஆகாரத்திற்கு

**தாமோதர விலாஸ்**

சொந்தக்காரர்: P. A. நடேசபிள்ளை

239, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

சுவையான ஆகாரங்களா....
சுத்த பசும்பால் குளிர்பானங்களா...
சுகாதார சைவ போசனமா...

தேவைகளுக்கு உடன் விஜயம் செய்யுங்கள்

விசேட ஆடர்கள் உடன் கவனிக்கப்பெறும்.



**சினிமாஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரின் உன்னத திரை ஓவியம்**

வெற்றிகரமான 2வதுவாரம்

கிங்ஸ்லி (கொழும்பு) — பிளாஸா (வெள்ளவத்தை)

நவா (கொம்பனித்தெரு) — வெலிங்டன் (யாழ்ப்பாணம்)

ஸ்ரீகிருஷ்ணா (திருகோணமலை) — விஜிதா (மஸ்கேலியா)

மோடர்ன் (பதுளை) — விஜயா (மட்டக்களப்பு)

லக்ஷ்மி ([illegible]) — தீவொளி (நுவரேலியா)

சிவாஜி கணேசன், ஜெமினி கணேசன் நடித்த

**பாவ மன்னிப்பு**

இப்பொழுது திரையிடப்படுகிறது!

**மனோஹரா** (யாழ்ப்பாணம்)

தினசரி மாலை 6-30க்கும் இரவு 9-30க்கும் சனி, ஞாயிறு பிற்பகல் 2-30க்கு மெற்னி

ஜெமினி கணேசன், பி. சரோஜாதேவி நடித்த

**கைராசி**


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலை வீதி, 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1961-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 12-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

## சிவானந்தரின் ஜனன தினம்

காங்கேசன்துறை, திங்கள்

கட்டுவன் திவ்விய ஜீவன சங்கத்தின் ஆதரவில் கட்டுவன் தண்ணீர்த் தாழ்வு ஞானவைரவர் கோவில் மண்டபத்தில் இமயஜோதி சிவானந்தரின் 75வது ஜனன தினம் கொண்டாடப்பட்டது.

சுவாமிகளின் உருவப் படம் மயிலிட்டி கிராமச்சங்க அங்கத்தவர் திருமதி அழகம்மாவின் இல்லத்திலிருந்து மேளவாத்தியத்துடன் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டது. கூட்டத்திற்கு தபாற் கந்தோர் அதிகாரி திரு. கந்தையா தலைமை வகித்தார். பிரதம பேச்சாளராகக் கலந்துகொண்ட திரு. க. பொன்னம்பலம் சுவாமியின் தொண்டையும் அவர் ஆற்றிய செயல்களையும் எடுத்துரைத்தார்.

---

## கைலாசபிள்ளையார் கோவில்

### நவக்கிரக கும்பாபிஷேகம்

நல்லூர், செவ்வாய்

நல்லூர் கைலாசபிள்ளையார் கோவில் நவக்கிரக மஹா கும்பாபிஷேகம் வரும் வியாழனன்று காலை 10 மணிக்கு நடைபெறும்.

சென்ற ஞாயிற்றுக்கிழமை விக்னேஸ்வர பூஜையுடன் ஆரம்பித்த இவ்வைபவத்தில் யாக பூஜை யந்திரஸ்தாபனம் முதலியவை நடத்தப்பட்டன.

வெள்ளிக்கிழமை தொடக்கம் மண்டலாபிஷேகம் நடைபெறும்.

---

## தாச்சி விளையாட்டுப் போட்டி

### விவேகானந்தா வெற்றி

சுதுமலை, செவ்வாய்

சுதுமலை சனசமூக நிலைய விவேகானந்தா கோஷ்டிக்கும் சுன்னாகம் ஜெக்கட், சுதுமலை பிறிலியன் கூட்டுச் சேர்ந்த கோஷ்டிக்குமிடையே மானிப்பாய் பந்தியடி மைதானத்தில் நடைபெற்ற தாச்சிப் போட்டியில் விவேகானந்தா கோஷ்டியினர் 3 பழங்களும், ஜெக்கட் பிறிலியன் கோஷ்டியினர் 2 பழங்களும் பெற்றனர்.

ஆனைக்கோட்டைப் பொலிஸ் அதிபர் திரு. கந்தையா, திரு. க. தம்பிராசா, திரு பாக்கியநாதன் ஆகியோர் மத்தியஸ்தர்களாக கடமையாற்றினர்.

---

## பயங்கர சூறாவளி

நியூஆர்லியான்ஸ், (லூஸியானா) செப். 10

மெக்ஸிகோவளை குடாவிலிருந்து புயல் வருவதையொட்டி, லூஸியானா, டெக்ஸாஸ் கடலோரப் பகுதியிலிருந்து சுமார் 2 லட்சம் மக்கள் இன்று ஓட்டம் எடுத்தனர்.

சமாதான காலத்தில் இயற்கை விபத்து காரணமாக அமெரிக்காவில் மக்கள் வெளியேறுவது இதுவே மிகப்பெரியதாகும் என்று அமெரிக்க செஞ்சிலுவை அதிகாரியொருவர் இன்று காலை கூறினார்.

இச்சூறாவளிக்காற்று இதுவரை கண்டிராத அளவுக்கு மிக ஆபத்தானது என்றும் கடற்கரைப் பகுதியில் மணிக்கு 150 மைல் வேகத்தில் காற்று அடிப்பதாகவும் அமெரிக்க வானிலை நிலையம் கூறியது.

---

## யுத்தத்திற்கு சீனா ஏற்பாடு

ஹாங்காங், செப். 10

சீனாவின் கரையோரமாகவுள்ள குமாய், மட்சு தீவுகளைக் கைப்பற்றுவதற்கு அக்டோபரில் ஒரு பெரும் கடற்போர் நடத்துவதற்கு சீனா கம்யூனிஸ்டுகள் ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறார்களாம்.

இந்தத் தகவலை 'டைரஸ்ட்' என்னும் சீன சஞ்சிகை வெளியிட்டிருக்கிறது.

## "பாரதிவிழா, வாழ்வில் மாற்றமுண்டாக்க வேண்டும்"

மாவிட்டபுரம், திங்கள்

"பாரதிவிழாக் கொண்டாட்டங்கள் இன்று நேர்த்திக்கடன்போல கொண்டாடப்படுகிறன்ன. இலங்கையில் பாரதியாரை மக்கள் நன்கு உணரவில்லையெனக் கூறலாம். பாரதியார் தமிழுணர்ச்சிக்கு மாத்திரம் உபயோகிக்கப்பட்டார். பாரதி பிறந்திராவிட்டாலும் தமிழ்ச் சிறப்புடைத்தாய் அதற்குரிய அந்தஸ்தைப் பெற்றிருக்கும். அத்தகைய சிறந்த காவியங்களை, நூல்களை, பாடல்களை ஆக்கியுள்ளார்கள். ஆனால் பாரதியார் / எங்கள் நண்பனாக எங்கள் உதவியாளனாக, எங்கள் வழிகாட்டியாகத் தோன்றினார். வையகங்காப்பவரேனும், வாழைப்பழக் கடை வைப்பவரேனும் கடமையுணர்ச்சியினின்றும் தவறுதுவாழின் அவன் யோகியே. பககத்திருப்பவர் துன்பம் பார்க்கப்பொறாதவன் யோகி. பாரதி விழா நமக்கு வாழ்வில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும்." இவ்வாறு குரும்பசிட்டி உதயதாரகை மன்றத்தினர் ஞாயிற்றுக்கிழமை கொண்டாடிய விழாவில் 'பாரதி வகுத்த பாதை' என்னும் பொருள் பற்றி சொற்பொழிவாற்றிய, இலங்கைப் பல்கலைக்கழக தமிழ் விரிவுரையாளர் திரு. க. கைலாசபதி குறிப்பிட்டார்.

இந்த விழாவுக்கு வசாவிளான் அரசினர் மத்திய கல்லூரி ஆசிரியர் திரு. ந. இராமலிங்கம் தலைமைதாங்கினார். தேசமக்களுக்கு விடுதலை உணர்ச்சி ஊட்டி அதே நேரத்தில் தமிழ்த்தொண்டும் புரிந்த பாரதியாரைக் கொண்டாடி அதன் பயனை அடைய முன்வந்த உதயதாரகை மன்றத்தினரை தலைவர் பாராட்டினார்.

பண்டிதர் வ. நடராசா வரவேற்புரை நிகழ்த்தினார். "பாரதிகாட்டிய தெய்வநெறி" என்னும் பொருள்பற்றிப் பேசிய திரு. கே. பி. ஹரன் "பாரதியார் பலவிதமான பாடல்கள் பாடியுள்ளார். அவற்றுள் தோத்திரப் பாடல்கள் அநேகமானவை. அவற்றில் தெய்வீக உணர்ச்சி மிளிரும். துன்பம் நெருங்கி வந்தபோதும் அன்பு மிகுந்த தெய்வம் உண்டு. என தெய்வ உணர்ச்சியின் அத்தியாவசியத்தைக் காட்டியுள்ளார். அவரது தெய்வீகப் பாடல்கள் பல மதங்களையும் அவ்வவ் மதகர்த்தாக்களையும் போற்றுகிறது. அவரது பாடல்கள் ஒரு மதத்துக்கு மாத்திரம் உரியனவாகா" என்று கூறினார்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி ஆசிரியர் திரு. இ. மகாதேவா 'பாஞ்சாலி சபதம்' என்னும் பொருள் பற்றிப் பேசும்போது, முற்போக்கு இலக்கியம் பற்றி இக்காலத்து நடக்கு சர்ச்சைகளைக் குறிப்பிட்டு,மாறிவரும் சமுதாயத்துக்கேற்க மக்கள் வாழ்வுக்கு வழிகாட்டியாக உதவும் இலக்கியங்களை ஆக்கிய பாரதி ஒரு முற்போக்கு இலக்கிய கர்த்தா ஆவார் எனவும், அவருடைய இலக்கியங்கள் பல இன்று தேவையற்றனவாய்ப் போய்விட்டன வாயினும் பாஞ்சாலி சபதம் போன்ற இலக்கியங்கள் என்றும், நின்று நிலைக்கும் என்றும் குறிப்பிட்டார். கலை நிகழ்ச்சிகளுடன் விழா முடிவுற்றது.

---

## கொழும்பில் விநோபாஜீ பிறந்ததின கூட்டம்

கொழும்பு, திங்கள்

விநோபாஜீயின் 66-வது பிறந்ததினம் கொழும்பு ராயல் கல்லூரி மண்டபத்தில் கொண்டாடப்பட்டது. "உலகில் சமாதானமும், சந்தோஷமும் ஏற்பட உண்மை, அஹிம்சை, சுயநலமின்மை ஆகியவற்றைக் கடைப்பிடிப்போமாக" என்று 2 நிமிடம் மௌனப் பிரார்த்தனை நடைபெற்றது.

இந்திய உதவி ஹைகமிஷனர், திரு. கே. இராமச்சந்திரா ஆகியோர் விநோபாஜீயின் சேவைபற்றிப் புகழ்ந்துரைத்தனர்.

சர்வோதய சிரமதான இயக்கத்தைச் சேர்ந்த திரு. ஏ. டி. அரியரத்ன சர்வோதயம் பற்றிப் பேசினார்.

---

## குருஷ்சேவுடன் நேருவுக்கு நெருங்கிய தொடர்பு

புதுடில்லி, செப். 11

திரு குருஷ்சேவுடனும், ரஷ்ய மக்களுடனும் தாம் கொண்டுள்ள தொடர்பு பதவிகாரணமாக இல்லை என்றும், சொந்த முறையில் குருஷ்சேவுடனும் ரஷ்யமக்களுடனும் தமக்கு நெருக்கமான தொடர்பு இருக்கிறதென்றும் இதுபற்றிப் பெருமையடைவதாயும் நேருஜி இங்கு கூறினார். ரஷ்யாவில் ஒரு மலைக்கு "ஜவஹர்லால் நேரு சிகரம்" எனப் பெயரிட்டிருக்கிறார்கள் என்றும் ஆனால் இந்தியாவில் இவ்விதம் தனது பெயரையோ அல்லது வேறு எவருடைய பெயரையோ மலைகளுக்குச் சூட்டுவதைத் தாம் விரும்பவில்லை" என்றும் அவர் கூறினார்.

---

## மயிரிழையில் உயிர் தப்பினர்

கொழும்பு, திங்கள்

தெதுருஓயா யானை விரட்டும் முயற்சியில் எலிவிட்டியா என்றவிடத்தில் யானை ஒன்றின் தாக்குதலிலிருந்து சிலாபம் டி. ஆர். ஓ. திரு. ஜி. பி. ராஜபக்ஷாவும், திரு. நோயல் இலங்கரத்னவும் மயிரிழையில் உயிர் தப்பினர்.

## பாடசாலைகளை பூரணமாக மேற்கொள்ள 4 மாதமாகும்

### இன்ஸ்பெக்டர்களுக்கு கல்வி மந்திரி எச்சரிக்கை

கொழும்பு, திங்கள்

ஆகஸ்ட் மாதக்கடைசிக்குள் வித்தியாதிபதியின் நிர்வாகத்தில் மேற்கொள்ளப்படவிருந்த பாடசாலைகள், பூரணமாக மேற்கொள்ளப்படுவதற்கு இன்னும் 4 மாதங்கள் பிடிக்கும் என அறிவிக்கப்படுகிறது. ஏனெனில் பாடசாலைகள் சம்பந்தமாக பாடசாலை இன்ஸ்பெக்டர்கள் கல்விமந்திரிக்குச் சமர்ப்பித்துள்ள தகவல்கள் பூரணமாக இல்லை எனத் தெரிகிறது. 100 பாடசாலைகள் மட்டுமே அரசாங்கத்தால் இதுவரை மேற்கொள்ளப் பட்டிருக்கின்றன. இன்னும் 2400 பாடசாலைகள் எடுக்கப்படவிருக்கின்றன. அரசாங்கம் மேற்கொள்ளவிருக்கும் பாடசாலைகள் சம்பந்தமான தகவல்களை அறிவிக்குமாறு உத்தரவிடப்பட்டிருந்த இன்ஸ்பெக்டர்களுக்கு கல்வி மந்திரி விடுத்துள்ள எச்சரிக்கையில், பாடசாலை அதிபர்கள் கொடுக்கும் விபரங்களை நம்பியிராமல் அவற்றைத் தாங்களே சரிபார்க்க வேண்டும் எனக் கூறியுள்ளார்.